# செந்தமிழ்

தொகுதி 80 செப்டம்பர் 1986 பகுதி III

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

— உள்ளே —

இலக்கிய சிந்தனைகள்
— பழனி. அரங்கசாமி

பெர்னாட்ஷாவும் கடவுட் கொள்கையும்

ஆய்தம் தமிழ்ச் சொல்லா
— க. வீரகத்தி (ஈழம்)

மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரை - 1.

ஆசிரியர் : என். எஸ். முத்துமலைச்சாமி பி.ஏ.பி.எல்.

# செந்தமிழ்

தொகுதி 80 செப்டம்பர் 1986 பகுதி III

உள்ளே

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | இலக்கிய சிந்தனைகள் —பழநி. அரங்கசாமி | 1 |
| 2. | பெர்னாட்ஷாவும் கடவுட் கொள்கையும் | 7 |
| 3. | ஆய்தம் தமிழ்ச் சொல்லா —க. வீரகத்தி (ஈழம்) | 9 |
| 4. | ஜப்பானைப் பாருங்கள் | 14 |
| 5. | காவடி வரலாறு —டாக்டர் மு. மாணிக்கம் | 15 |
| 6. | திருப்புகழின் சமரச நோக்கமும் பொருள் நயமும் —சு. சந்தான கோபாலன் | 26 |
| 7. | கீரை விதை உணவாகிறது | 34 |
| 8. | கடல் கடந்த கண்ணன் | 35 |

பொறுப்பாசிரியர் : டாக்டர் பழநி. அரங்கசாமி

# இலக்கிய சிந்தனைகள்

— பழநி. அரங்கசாமி.

உயிர்களின் பரிணாம வளர்ச்சியில் உயர்ந்த நிலையில் இருப்பது மனித இனம். மானுடம் இந்த உயர்ந்த நிலையை அடைதற்கு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும். உயிரற்ற நிலையிலிருந்து உயிர்பெற்று, ஊர்ந்து நகர்ந்து, தாவி, பறந்து, தவ்வி, நடந்து மனித நிலை அடைந்த-தாக உயிர்நூலார் கருதுகின்றனர். சார்லஸ் டார்வின் என்னும் ஆங்கில நாட்டு உயிரியல் மருத்துவன் தென் அமெரிக்க நாடுகளில் கடற்பயணம் செய்து பல்வேறு உயிரினங்கள் பற்றி ஐந்தாண்டு காலம் தொடர்ந்து ஆய்வு நடத்தி இந்தக் கருத்தை உலக நாடுகளும் ஒத்துக் கொள்ளுமாறு செய்து விட்டான். சாதாரணமான ஒரு துக்கடாக் கவிஞன் கூட 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்று பாடக் கூடிய அளவிற்கு இன்று டார்வின் கொள்கைகள் உலக முழுதும் உணர்ந்து கொள்ளப்-பட்டுள்ளன. உலகளாவிய இந்த உயிரியல் ஆய்வினை 'உயிர்களின் தோற்றம்' (The Origin of Species) எனும் ஆங்கில நூலுள் (1859) டார்வின் பொதிந்து வைத்திருக்கிறான்.

வியக்கத்தக்க ஒரு செய்தி என்னவென்றால், டார்வின் ஆய்ந்து நிறுவிய பரிணாமக் கொள்கையின் முன்னோடியாக மணிவாசகரின் திருவாசகம் அமைந்திருப்பது தான்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் மிருகமாய்ப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

அறிவியலையும் தெய்வீக இலக்கியத்தினையும் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு புறமிருக்க, மனிதன் எப்போது பேசத் தொடங்-கினான் என்று எண்ணிப்பார்ப்போம். காடுகளிலும், மலைகளிலும் விலங்குகளாய் வாழ்ந்த நிலையில் சைகையே மொழியாய் இருந்திருக்க, மேலும் பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னரே பேச்சு வழக்கு வந்திருக்க வேண்டும். பேச்சு வழக்கு, பின்னர்

எழுத்து நிலைக்கு முன்னேறியிருக்க வேண்டும். ஏடும் எழுத்-தாணியுமே எழுது கருவிகளாய் இருந்த காலத்தில், நடைமுறை வாழ்க்கையில் பேச்சு வழக்குக்கும், நினைவாற்றலுக்கும் அதிக முக்கியத்துவம் இருந்திருக்கிறது. பனை ஓலையில் இரும்பு ஆணியினால் கீறிக்கொண்டே எழுதுவது இலகுவான பணியாக இல்லாமையினால், நினைவாற்றல் மூலமாகவே நூல்களைப் போற்றி உள்ளனர். எனேவ நினைவாற்றலுக்கு ஒரு தனி மதிப்பு இருந்திருக்கிறது. நமதுநாட்டில் மட்டுமல்ல நம்மையொத்துப் பழம் பெருமை பேசும் கிரேக்க நாட்டிலும் அப்படித்தான். இலியட், ஆடிசி (Iliad, Olyssey) எனும் மாகாவியங்களைப் பாடலாகவே பொழிந்து தள்ளிய பார்வையற்ற கவிஞன் ஹோமர், பழுமரந்தேறும் பறவை போல ஊர் ஊராகச் சென்று கிரேக்க வீரர்களின் பெருமையினைப் பாடிக் கொண்டே காலத்தைப் போக்கினான் என்கிறது வரலாறு. தனது 42 - ஆம் வயதிலேயே கண் பார்வை இழந்து விட்ட ஜான் மில்டன் சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்னும் பன்னீராயிரம் வரிகள் கொண்ட மாகாவியத்தைக் கொடுத்துள்ளான்.பதினைந்தாம் வயது தொடங்கி 42 - வயது வரை அன்றாடம் நள்ளிரவு வரைக்கும் கண் விழித்துப் படித்ததனால் மில்டனுக்குப் பார்வை போய்விட்டது. ஹோமரும் அப்படித்தான் பார்வையினை இழந்தாரோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. கிறித்துவுக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தாகக் கருதப்படும் பிளேட்டோ என்னும் தத்துவ ஞானி எழுதியதாகக் கூறப்படும் நூல்கள் அனைத்தும் அவரால் எழுதப்பட்டன அல்ல. தன்னுடைய சீடர்களிடம் அவர் உரை-யாடிய கருத்துகளை கர்ண பரம்பரையாகக் காப்பாற்றி, பிறகு தான் நூல வடிவம் கொடுத்தார்கள். இந்திய நாட்டிலும் நான்கு வேதங்களையும் எழுதாக்கிளவி என்று தானே சொல்-கிறோம்! எழுதப் பெறாமல் வேதங்களை (அத்யயனம்) ஒரு காலத்தில் வாய் மொழியாகவே காப்பாற்றி வந்துள்ளார்கள். ஈங்கு பாராட்டப்படவேண்டியது நினைவாற்றல் மட்டுமல்ல: மரபு வழிப்பட்ட தெய்வீக இலக்கியங்களை இறவாது போற்றி வளர்க்க எண்ணிய பக்தி உணர்வும் தான். சேர சோழ பாண்டியர் காலத்தில் பட்டயங்களையும் அரச ஆணைகளையும் செப்புத் தகடுகளில் பொறித்துள்ளனர். வேதங்கள் மட்டுமின்றி நீதிநூல்கள், பிற இலக்கியங்கள் அனைத்தையும் தகடுகளில் பொறிக்க முடியாது அல்லவா! எனவே ஆன்மீக, நீதி நூல்கள் எல்லாம்

பிற்காலத்தில் வாய்மொழி நிலையிலிருந்து சற்றே மாறி ஓலைச் சுவடியிலும் குடிபுகுந்தன.

கிறித்துவுக்குப் பிற்பட்ட பதினைந்தாம் நூற்றாண்டில் வில்லியம் காக்ஸ்டன் என்னும் ஆங்கிலேயர் கண்டுபிடித்த அச்சு இயந்திரம் இலக்கிய உலகில் ஒரு பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் எழுத்தாணி பிடித்துப் பனையோலையில் கீறிக்கொண்டே இருந்த நிலைமாறி விரைவாகவும், அதிக எண்ணிக்கையிலும் அச்சுவாகனம் ஏறி இலக்கிய ஏடுகள் பல்கிப் பெருகின, எகிப்து போன்ற ஆப்பிரிக்க நாடுகளிலும், சிரியா, பாலஸ்தீனம், துருக்கி போன்ற அராபியப் பகுதிகளிலும் பாப்பிரஸ் என்ற மரப்பட்டையிலும் ‘ஸ்க்ரால்’ எனும் பெயரிய ஆட்டுத்தோல் பட்டையிலும் எழுதிய காலம் மறைந்து அங்கும் காகித ஏடுகளில் அச்சடிக்கத் தொடங்கி விட்டனர்.

ஏறத்தாழ உலகமெங்கணும் வாய்மொழி இலக்கியங்கள் (oral literature) அனைத்தும் காலப் போக்கில் எழுத்து இலக்கியங்களாக (written literature) மாறிவிட்டன. அச்சிலும் ஏறி நூல் வடிவில் வளர்ந்து விட்டன. நமது நாட்டைப் பொறுத்தவரையில் கல்கத்தாவுக்கு அருகில் செராம்பூரிலும், தமிழகத்தில் தரங்கம் பாடியிலும், கேரளத்தில் அம்பலப்புழை எனுமிடத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சடிப்புப்பணி தொடங்கி விட்டது. அறிவின் பெருக்கத்திற்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் ஏதுவாகிய நூல்கள் அழகுற அச்சிடப்பட்டு இன்று நம் கையில் கிடைக்கின்றன. பல் வண்ண ஓவியங்களும் கூட அச்சேறி நூலுக்கு அணி செய்கின்றன. பல வண்ணங்களை ஒரே தாளில் ஒவ்வொரு முறையாக அச்சிடாமல் பல்வேறு வண்ணங்களையும் ஒருங்கே ஒரே நேரத்தில் அச்சிடுகின்ற கலையில் ஜப்பானின் தலைநகரம் ஆகிய டோக்கியோவில் உள்ள தாய்நிப்பான் அச்சுக்கூடம் உலகத்திலேயே முன்னணியில் நிற்கிறது.

அதிவிரைவாகவும், அழகுறவும் அச்சடிப்பதில் ஜப்பான் முன்னேறியுள்ளது. ஜப்பானியர்களோ நூல்களையும் பத்திரிக்கைகளையும் படிப்பதில் முதலிடம்பெறுகின்றனர். இரண்டாம் உலகப்போரில் நொறுங்கிப்போன ஒரு சிறு நாடு இன்று மின்னணுப் பொறியியல், கப்பல் கட்டுதல் ஆகிய பல்வேறு துறைகளில் வானுற ஓங்கி

வளர்ந்திருப்பதனை நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். யுனெஸ்கோ (UNESCO) எடுத்த புள்ளி விவரப்படி ஜப்பானில் ஆயிரம் பேருக்கு அறுநூறு பேர் செய்தித்தாள் படிக்கின்றனர், இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் எல்லாம் அதற்கு அடுத்தடுத்த நிலைதான் இந்தியாவிலோ ஆயிரம் பேருக்கு பதினாறு பேரே செய்தித்தாள் பார்க்கின்றனர். நூல்கள் படிப்போரைப் பற்றிய புள்ளி விவரம் தெளிவாகக் கிடைக்கவில்லை. மக்கட் தொகைக் கணக்கு பத்து ஆண்டுக்கு ஒரு முறை எடுக்கும் போது தான் எழுதவும், படிக்கவும் தெரிந்தோரைப் பற்றிய எண்ணிக்கை வெளியாகிறது ஆயினும் இந்தப்பட்டியலில் வரும் படிக்கத் தெரிந்தோர் அனைவரும் இலக்கியம், அறிவியல், பொருளியல், தத்துவம் போன்ற சிந்தனைக்கு வேலைகொடுக்கும் நூல்களைப் படிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

அறிவியல் வளர்ந்து வரும் வேகத்தைக் காணும் போது, இப்போதெல்லாம் அரியபெரிய நூல்களைக் கூடப் படிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிகிறது. மிகப்பெரிய காவியங்களையும் நாவல்களையும் (cassettes) நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து அவற்றை வானொலிப் பெட்டிகளில் போட்டு கேட்டுக் கொள்ளும் காலம் வந்து விட்டது. நூல்களைக் கையில் பிடித்துக் கொண்டு கண்களுக்கு வேலை கொடுத்து பக்கம் பக்கமாகப் புரட்ட வேண்டிய தொல்லை இனிமேல் இல்லை. சிறிய எழுத்துகளில் அச்சு அடிக்கப்பட்ட நூலாக இருக்கிறதே என்று மனம் புழுங்க வேண்டியதில்லை. அமர்ந்திருக்கின்ற இடத்தில் குறைவான அல்லது மங்கலான வெளிச்சம் இருப்பதனால் இந்நூலைப் படிக்க முடியவில்லையே என்று கவலையுறத் தேவையில்லை. பேருந்து ரயில் பயணங்களில் ஏற்படும் அசைவு குலுக்கல் அதிர்வு ஆகியவற்றினால் தொடர்ந்து எதனையும் படித்து ரசிக்க இயலவில்லையே என்று வீணாக வெறும்பேச்சு பேச வேண்டுவதில்லை.

இவற்றுக்கு மாறாக இன்றைய ஒலிப்பதிவு நாடாவின் வருகையினால் வாசகர் வட்டம் நின்றும் இருந்தும் கிடந்தும் கேட்கலாம். கேட்டல் என்பது படிப்பினை ஒத்ததுதான். ஒரு குறளுக்கு எழுத வந்த உரையில் பரிமேலழகர் ''நினைத்தலும் செய்தலோடொக்கும்'' என்பார். அதுபோலவே இனிகேட்டலும் படித்தலோடொக்கும்

என்று நாம் சொல்லிக் கொள்ளலாம். பகலில் படிப்பதோடன்றி, விளக்கு வெளிச்சம் இல்லாமலே கூட இரவிலும் எந்த நூலின் படிப்புறு பயனையும் அடையலாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பள்ளிக்கல்வி கல்லாதோரும் படிக்கலாம். பார்வையற்லோர் யார் துணையுமின்றியே பற்பல நூல்களைப் படிக்கலாம். கேட்டலாகிய இந்த படிப்பு இப்போது அமெரிக்க நாட்டில் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. இரண்டு மூன்று கார்களை வைத்திருக்கும் அமெரிக்கக் குடும்பத்தினர் நெடுந் தொலைவுப் பயணம் மேற்கொள்ளும் போது நாடா-நூல்களை (cassette-books) எடுத்துச் செல்லுகின்றனர். வாஷிங்டன், நியூயார்க், பர்மிங்காம் போன்ற அமெரிக்க நகரங்களில் உள்ள புத்தகக் கடைகளில் ஒரு பகுதியினை நாடா-நூல்களுக்கு என்று ஒதுக்கியுள்ளனர். ஒலிபரப்புக் கருவியும் அங்கேயே விற்பனை செய்யப்படுகிறது. அண்மையில் வெளி வந்த 'டைம்' வார இதழின் கணக்குப்படி, நாடகம், கவிதை நாவல், பொதுஅறிவு தொடர்பான இதுவரை ஒலிப்பதிவு நாடாக்களாக மாற்றப்பட்ட பல்வேறு நூல்களின் மொத்த எண்ணிக்கை அங்கு பன்னிரண்டாயிரம். ஷேக்ஸ்பியர், டிரைடன், மில்டன் மெல்வில், டிக்கன்ஸ், போன்றோரின் நூல்களேயன்றி அண்மையில் அமெரிக்காவில், வெளியாகிய இரண்டு மூன்று மாதங்களுக்குள் ஒரு கோடி பிரதிகளுக்கு மேல் விற்பனையான லீ இயாகாக்கோ எனும் தொழில் நிபுணரின் தன்வரலாறு போன்ற நூல்களும் இதனுள் அடங்கும்.

அமெரிக்கர்கள் பிறிதோர் புதுமையினையும் இந்த விஞ்ஞான விந்தையில் இணைத்துள்ளனர். ஒரு புதினத்தில் ஓரிடம் மலைப்பகுதி பற்றிய விளக்கமாக இருந்தால் அந்நூலாசிரியரின் கூற்றாக வரும் அந்த இடத்திற்கேற்றாற் போல் வண்டின் ரீங்காரத்தையும், அருவியின் சலசலப்பையும், இலைகள் உதிர்வதையும் சொட்டுச் சொட்டாக இலைகளிலிருந்து பனித்துளிகள் வீழ்வதையும் படிக்கப்படுகின்ற நூலோடு இணைத்து விடுவதே அந்தப்புதுமை. இந்த மாதிரி ஒலி நாடாக்களுக்கு இப்போது அதிக கிராக்கி என்று சொல்லப்படுகிறது. நாடாக்களில் ஒலிப்பதிவு செய்தற்கு ஏற்ற வளமான குரல் உடைய ஆடவருக்கும் பெண்டிருக்கும் இதனால் நல்ல வருமானம். நூலாசிரியனுக்கு கொடுக்கும் ராயல்டி தொகையினை விட இந்த குரல் மன்னர்களுக்கே அதிக மதிப்பும் வருமான்மும் என்று தெரிகிறது.

சைகை பேச்சாக மாறியது ஒரு நிலை. பேச்சுமொழி எழுத்தாக வடிவம் பெற்றது. ஒரு வளர்ச்சி. எழுத்தும் அச்சேறி அழகிய நூலாகிய உருப்பெற்றது அதனிலும் ஒரு முன்னேற்றம். அச்சேறிய நூல்கள் ஒலி நாடாக்களாக மாறிக்கொண்டு வருவது முன்னேற்றத்தில் அடுத்த உச்சநிலை. இவற்றையெல்லாம் வளர்ந்து வரும் மனித நாகரிகத்தின் பல்வேறு படிநிலைகளாகக் கொள்ளலாம்.

---

## இரத்தமின்மை (Anaemia)

உடல் வெளுத்துப்போய் சோகை நோய் பீடிக்கப்பட்டோரைப் பார்த்தவுடன், அவர்கள் உடலில் இரத்தமின்மையைத் தெரிந்து கொள்ள முடியும். போதிய உணவின்மையும், உண்ணுகின்ற உணவில் ஊட்டச்சத்து (Nutrients) குறைவாக இருத்தலும் இரத்தமின்மைக்குக் காரணங்களாகும். எத்தியோப்பியா, கென்யா, டான்சானியா, ஜிம்பாப்வே போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்தமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளிடம் சோகை ஏற்படும்பொழுது மன வளர்ச்சி குன்றும். 20-வயதிற்குள் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்து ஓரிரு ஆண்டுகளுக்குள் அப்பெண்கள் தாய்மை அடையும் போது பெண்களை இந்த நோய் தாக்கக் கூடும். இரத்தத்தில் இரும்புச் சத்து குறைவதனால் நோயின் கடுமை அதிகரிக்கும். உணவில் சி-வைட்டமின் தரும் பழங்களையும், கீரைகளையும் தொடர்ந்து சேர்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு தாய்ப்பால கொடுப்பதனால் குழந்தைகளை சோகை நோயிலிருந்து காப்பாற்றலாம்.

# பெர்னாட்ஷாவும் கடவுட் கொள்கையும்

அயர்லாந்தில் பிறந்த பெர்னாட்ஷா (1856-1950) தமது 20-வது வயதில் லண்டனில் குடியேறினார். ஆழ்ந்த சிந்தனையாளர். உள்ளத்தில் தோன்றியதை ஒளிவு மறைவின்றி வெடுக்கென்று சொல்லிவிடும் துணிச்சல் அவருடன் கூடப்பிறந்த குணம். பகைமை, எதிர்ப்பு, கோப தாபங்களுக்கு அஞ்சாதவர். அவருடைய 54 நாடகங்களில் கிண்டலும், கேலியும் இல்லாதன இல்லை. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது அவருக்குப் பிடிக்காத ஒன்று'

"எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும் பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்த"வர் என்று கூடச் சொல்லலாம்.

ஆக்கவும் அழிக்கவும் வல்லவர் கடவுள் என்பது பொதுவான கருத்து. சர்வ வல்லமையுள்ள அக் கடவுளை வாழ்த்துவதும் வணங்குவதுமே நமது கடமை. அதனைச் செய்து விட்டு நம்மைச் சுற்றிலும் காணும் போது அநீதியும், கொடுமையும், தீமைகளும் தலைவிரித்தாடுகின்றன. ஆயின் அவரை வணங்குவதனால், நாம் பெறும் பயன் என்ன? இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டு கடவுட் கொள்கை பற்றி அலசி ஆராய்ந்து கடவுளுண்மை என்பது வெறும் கனவே என்று பகுத்தறிவாளர் முடிவு செய்கின்றனர். நாத்திகம் என்பது மதியீனம் என்று கருதப்பட்டாலும், கண்மூடித்-தனமாகக் கடவுளை வணங்குபவனை விட, தீர்க்க சிந்தனை-யாளனாக விளங்கும் நாத்திகனே மிகச் சிறந்தவன் என்று உறுதியாகக் கூறலாம்.

உலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்றாலும் அதில் வாழும் நாம் இவ்வுலகத்தில் காணப்படும் குறைகளைக் கடிந்து குணங்களைப் போற்றுதல் வேண்டும். இந்த நல்ல காரியங்களைச் செய்வதற்குரிய கருவியாக நம்மைப் பயன்படுத்திக் கொள்ளுதலே மிகவும் வேண்டுவது என்பது ஷாவின் கருத்து. ஜோன் ஆப் ஆர்க் என்ற 19 - வயது வீரமங்கையைப்பற்றிய அவரது நாடகத்தில், கடவுளருளால் ஆங்கிலேயரை வென்றாள் என்று கூறாது தனது திறமையினாலும், ஆற்றலினாலுமே அவள் வெற்றி பெற்றாள் என்று கூறுகிறார்.

கிறித்தவ மதத்தின் ஒரு பெரும் பகுதியாக இருக்கும் புரொட்டஸ்டன்ட் குடும்பத்தில் பிறந்தாலும், இயேசு கிறித்துவை உழவர் குடும்பத்தில் பிறந்த ஒருவர் என்று தான் ஷா கருதினார். கிருத்தவ வேத நூலாகிய பைபிள் கூறுகின்ற நிகழ்ச்சிகளும், கதைகளும் வெறும் பொய்யுரைகள் என்றும் கட்டுக்கதை என்றும் கூறுவதற்கு ஷா தயங்கவில்லை. இத்தகு புரட்சிகரமான கருத்து-களை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துக் கூறி வந்த ஷா, சொந்த வாழ்க்கையில் கடைப்பிடித்த அரிய குணநலன்கள் பெரிதும் பாராட்டத்தககன.

ஆங்கில நாட்டில் வாழ்ந்தாலும், அவர் மது அருந்தியதில்லை. ஊன் உண்பதில்லை. புகைக்கும் பழக்கமும் அவருக்கு கிடையாது. காதல் காட்சிகளும், விரசமான, நிகழ்ச்சிகளும் அவருடைய நாடகங்களில் அதிகமாக இடம் பெறவில்லை.

அமெரிக்காவில் இங்கர்சால் என்னும் சிந்தனையாளர் பைபிளைப் பற்றியும், ஏசு கிறித்து பற்றியும் எந்த விதமான கருத்துகளை மேடைகளில் பேசி வந்தாரோ, அதே போன்று அத்தகு எண்ணங்களைத் தமது நூல்களில் எடுத்துக்காட்டியவர் பெர்னாட்ஷா. நாத்திக வாதியாக உலகம் கருதி விடும் என்பது பற்றி அவர் அஞ்சவில்லை. சமூக, அரசியல், மதக் கொள்கை களைப்பற்றி உள்ளத்தில் தோன்றியதை ஒளிக்காமலும், குறைக்-காமலும் அப்படியே பேசுவதும் எழுதுவதும் அவரது பழக்கமாக இருந்தது. முகமனாகவும் சம்பிரதாயமாகவும் சுற்றி வளைத்துப் பேசுவதும் அவருக்குப் பிடிக்காது உலக இயல்புக்கு மாறாக இத்தகு குணநலன்களைப் பெற்றிருந்தமையான் பெர்னாட்-ஷாவை நேசித்தோரை விட நிந்தித்தவர்களே அதிகம்.

——(:)——

# 'ஆய்தம்' தமிழ்ச் சொல்லா?

க. வீரகத்தி (ஈழம்)
சிறப்பு ஆய்வாளர்
தஞ்சைப் பல்கலைக் கழகம்.

ஆய்தம் ஒரு தூயதமிழ்ச்சொல் என்றும், அது தமிழ்ச்சொல் அன்று வடமொழி அல்லது வடமொழிச் சிதைவு என்றும் விவாதம் பண்ணிய இரு தரப்புக்கள் உண்டு. இப்போது பெரும்பாலோரால் அது தமிழ்ச் சொல்லே என்று முடிவுகட்டப்பட்டுள்ளது. ஆனாலும் உண்மையைக் கண்டுகொள்வதே ஆய்வின் நோக்கம் ஆகையால் மீண்டும் அதுபற்றிச் சிந்திப்பதில் தவறு இல்லை,

ஒரு சொல் தமிழ்ச்சொல்லா இல்லையா எனத் தீர்மானிப்பது எப்படி? வேர்ச்சொல் தமிழ்மூலமா எனப்பார்ப்பது, ஒருவழி. சொல்லாக்க நெறியைப் பகுத்துப் பார்ப்பது இன்னொருவழி. அதுபோன்ற வேறு மூலங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது மற்றொரு-வழி. ஒரே குடும்ப மொழிகளில் மற்றொரு மொழி அமைப்புடனும் ஒத்து நோக்குவது பிறிதொருமுறை. இவ்வாறு பலபடியாக சொல்லின் மூலம் ஆய்ந்து பார்க்கப்படுகிறது. நெடுங்காலமாக இருந்து வரும் வழக்காற்றினை மட்டுமே மொழியின் மூலத்தைத் தீர்மானிப்பதற்கான காரணியாகக்கொள்ள முடியாது. தொல்-காப்பியர் காலத்திலிருந்து அல்லது அதற்கு முன்பிருந்தும் கூட ஆய்தம் என்ற சொல் பயன்பட்டுவருவதைக் கொண்டு அது ஒரு தமிழ்ச்சொல் என்று கொள்வதற்கில்லை. தொல்காப்பியத்தில் ஆய்தம் என்ற சொல் மாத்திரமல்ல, வேறுசில வடசொற்களும் பாகதச் சிதைவுகளும் உண்டு. முன் குறிப்பிட்டதுபோல் ஆய்தம் என்ற சொல்லை ஆய்வோம்.

1. வேர்சொல்லை ஆராய்ந்து கொள்வதிலும் மிகுந்த அவதானம் வேண்டும். வேற்று மொழிச் சொற்சிதைவுகளிலும் சொல்லின் முதற்கூறு தூய தமிழ்வடிவ மூலத்துடன் ஒத்திருக்-கலாம். பாகதம் என்ற சொல்லை எடுப்போம். இது பிராகிருதம் என்ற மொழியின் சிதைவு ஆனால் முதல் உறுப்பாகிய சிதைவுண்ட பா என்பது அருமையானதோர் தமிழ் வேர்ச்சொல் வடிவம். ஆகவே இதனைத் தமிழ்ச்சொல் எனலாமா? இதுபோன்றதே ஆய்தம்

என்பதன் மூலமான ஆய் என்பதும். ஆய் என்ற வேர்ச்சொல்லைக் கொண்டு மாத்திரம் அது ஒரு தமிழ்ச்சொல் என்று கருத இயலவில்லை.

2. சொல்லாக்க நெறியைக்கவனிப்போம். ஆய் + த் + அம் என இச்சொல் பகுபடும், தகரமெய் எழுத்துப்பேறு என்று சொல்லலாம். சரி, இனி இதுபோன்ற வேறு வினைப்பகுதிகளில் சொல்லாக்க முறையை நோக்கலாம். ஆய்தம் ஒரு தமிழ்ச் சொல்லானால் அது ஒரு வினையடிப் பெயராகும். ஏனைய வினைப் பகுதிகளும் இதுபோல் வினையடிப் பெயர்களைத் தோற்றுவித்துள்ளனவா?

2.1

| | வினைமூலம் | வினையடிப்பெயர் | |
|---|---|---|---|
| (அ) | காய் > | காய்வு, | காயம். |
| | சாய் > | சாய்வு, | சாயம். |
| | மாய் > | மாய்வு, | மாயம். |
| | ஆய் > | ஆய்வு, | ஆயம், |
| (ஆ) | நோக்கு > | ——— | நோக்கம். |
| | தேக்கு > | ——— | தேக்கம். |
| | திருப்பு > | ——— | திருப்பம். |
| | கட்டு > | ——— | கட்டம். |
| (இ) | குறு > குறுக்கு | ——— | குறுக்கம். |
| | நீள் > | நீளம், | நீட்டம். |

ஒத்த வினைமூலம் ஆனாலும் அல்லது குற்றியலுகரப் பகுதியானாலும் அம் விகுதியுடன் நேராக இணைகின்றதன்றி எழுத்துப்பேறு ஒரு கூறோ அல்லது சாரியையோ இடையிற் சேரவில்லை. 'ஆய்தம்' இந்த நெறியிலிருந்து விலகி நிற்கிறது.

தெ.பொ.மீ. அவர்கள் பிரித்துக்காட்டிய முறையையும் பார்த்து விடுவோம். (தமிழ்மொழி வரலாறு 1982 பக் 98). அவர்கள் ஆய்+து + அம் எனப் பகுத்துக்காட்டுவர். ஆய் + து + ஆய்து

எனச்சேரும். அப்படி ஒரு குற்றுகரப் பகுதி இல்லை. அதற்கெனப் பொருளும் இல்லை. இதனாலேதான் நுண்மதிமிக்க இலக்கண உரையாளர்கள் சொல்லாக்க நெறியில் பொருள் தருவதின்றி இடையில் வரும் உருபன்களை எழுத்துப்பேறு எனவும் குறியீடு செய்தனர். வேண்டும் என்றால் வருது என்பதுபோல் ஆய்து என்பதையும் ஆய்வேன் என்ற பொருளில் தன்மை ஒருமை வினைமுற்று எனக்கொள்ளலாம். அதனால் ஆய்+து எனப் பகுத்துக் காட்டுவதற்கில்லை.

நெடில் யகரமெய்ப் பகுதிகளை இதுவரை பார்த்தோம். இனி, நெடில் ரகர/வகர மெய் வினைப் பகுதிகளிலிருந்து தோன்றும் வினையடிப் பெயர்களைக் கவனிக்கலாம்.

| வினைமூலம் | வினையடிப்பெயர் |
|---|---|
| சார் > | சார்வு, சார்பு, சாரம்.* |
| ஈர் > | ஈர்ப்பு, ஈரம். |
| சால் > | சால்பு, — |
| நூல் > | நூற்ப்பு, |

லகர மெய் வினைப்பகுதி அம் பெற்று வினையடிப்பெயர்கள் ஆகவில்லை. ரகர மெய் வினைப்பகுதி அம் பெற்று வினையடிப்பெயரை ஆக்கம் செய்த போதும் தகர மெய் எழுத்துப்பேறு ஆகவில்லை. ஆய்தம் என்ற சொல்லாக்கம் மேலே குறிப்பிட்ட நெறியில் அமையவில்லை. எவ்வாறு தமிழ் சொல் எனக் கொள்ளமுடியும்?

3. சொல்லாக்க நெறி போகட்டும், பொருளைப் பார்க்கலாம். ஆய்தல் என்பதற்குத் தொல்காப்பியம் கூறும் பொருள் என்ன?

"ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவியின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்" - (813)

ஒய்தல், ஆய்தல் நிழத்தல், சாய்தல் என்ற நான்கு சொற்களும் உள்ளதன் நுணுக்கத்தைக் குறிப்பன என்றுதான் விதிகூறும்.

அன்றி, இயல்பான நுணுக்க நிலையைக் குறிப்பிடவில்லை. அதாவது நுணுக்கம் நுண்மை என்ற சொல் இருவித தன்மை-களைக்குறிக்கும். ஒன்று இயல்பிலேயே நுணுகியநிலை. மற்றது, கூடிய அல்லது பருமட்டான நிலையிலிருந்து ஒடுங்கி ஒடுங்கி நுணுக்கமாகும் நிலை; இதுவே 'உள்ளதன் நுணுக்கம்' ஆகும். சொல்லதிகார உரையாளர்கள் அனைவரும் காட்டிய சான்றுகள் இதனைப் புலப்படுத்தும்.

"ஓய்கலை ஒருத்தல்" என்றக்கால், நுணுகிய கலை ஒருத்தல் என்பதாம்.

கையும் மெய்யும் ஆய்த்திருந்தார் என்றக்கால் சுருங்-கியிருந்தார் என்பதாம்.

'நிழத்த யானை மேய்புலம் படர' என்றக்கால் மெலிந்து நுணுகிய தென்பதாம்.

'கயலற எதிரக் கடும்புனல் சாஅய்' என்றக்கால் சுருங்கி என்பதாம். இவ்வாறு உரையாசிரியர் விளக்கம் தரும் வகையிலேயே ஏனையோரது சான்றுகளும் உள்ளதன் நுணுக்கத்தையே குறிப்-பிடுகின்றன.

* வீடு கட்டும்போது உயரஉயரப்போக நின்று கட்டுவதற்-காக தடிதண்டு முதலியவற்றால் கட்டப்படுவதைச் சாரம் கட்டுதல் என்கிறோம்.

அப்படியானால் ஆய் என்னும் வினைப்பகுதியடியாகப் பிறந்த ஆய்தம் எனும் சொல் எதன் நுணுக்கத்தை அல்லது எந்த உரத்த ஒலியின் நுணுக்கத்தைக் காட்டுகிறது? குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாவின்படி ஆய்தம் ஏதோ ஒரொலி நுணுகி நுட்பமான ஒலிநிலையைக் குறிக்கவில்லை. ஆய்தம் தமிழுக்கே உரிய சிறப்பொலி எனவும் இயல்பிலேயே நுட்பமான ஒலி எனவும் கருதப்படுவது. எனவே தொல்காப்பிய நூற்பா கூறும் பொருள் அடிப்படைகளிலும் ஆய்தம் என்பது தமிழ்ச் சொல் அன்று என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

4. இடைநிலை மயக்க அடிப்படையில் யகர மெய் தகர மெய்யுடன் மயங்கும் இலக்கண நூல்கள் அனைத்தும் ஒருமுகமாக இதனைக்கூறும். ஆய்தம் என்ற தூயதமிழ்ச்சொல் எனக்கருதப்படும் ஒரு சொல் வழக்கில் இருக்கவும், உரையாசிரியர் தொடங்கி ஆறுமுக நாவலர் வரை எவராவது யித் மயக்கத்திற்கு ஆய்தம் என்ற சொல்லை ஏனோ உதாரணமாகக் காட்டவில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் தவிர, அனைவரும் வேய் தீது என்ற இருமொழித் தொடரையே காட்டியுள்ளார்கள். நச்சினார்க்கினியரும் ஆய்தல் என்றே சான்று காட்டுவர். இலக்கணப்புலமைமிக்க அறிஞர்கள் அனைவரும் ஆய்தம் என்பது தமிழ்ச்சொல் ஆகாது எனக்கருதியிருத்தல் வேண்டும். என்னவகையில் நோக்கினாலும் ஆய்தம் தமிழ்ச்சொல் அன்று எனத்தெரிந்து கொள்ள முடிகிறது.

5. ஆய்தம் என்பதை வடமொழிச் சிதைவு என ஏற்றுக் கொள்வது பொருத்தமாகப்படுகிறது. அய்தம் என்ற சொல்லுக்குரிய விளக்கம் அளவில் திரு மு. இராகவையங்கார் ஆஸ்ரிதம் என்ற வடசொல் ஆய்தம் என மாற்றம் எய்திய முறையைக்கூறுவது வடமொழியாக்க விதிகளுக்குஉடன்பாடானதே. செந்தமிழ் தொகுதி 23 - பக்கம் 153 - இல் இதனுடைய விளக்கத்தைக் காணலாம். பிராகிருதம் பாகதம், இங்கே R ஒலி இழந்து விடுவது நமக்குத்தெரியும், மசானம் மயானம்; வடமொழியில் முப்பதாம் மெய் ஆகிய என்னு மெழுத்து யகரமாவதும் நமக்குத் தெரியும்.

இங்கே பேரறிஞர் இராகவையங்காரின் ஒலிநிலை பற்றிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை சொல்முடிவு பொருத்தமாக உள்ளது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்ச்சிறப்பொலியான அஃகேனத்திற்கு வடமொழி அறிஞர்கள் ஆஸ்ரிதம் எனப் பெயரிட்டு வழங்கியிருத்தல் வேண்டும். நாளடைவில் அது ஆய்தம் எனச்சிதைந்து தமிழோடு தமிழாகக் கலந்துவிட்டது. எனவே எளிமையும் இனிமையும் பொருந்திய ஆய்தம் என்ற சொல்லைத் தொல்காப்பியனார் இலக்கணக்குறியீடுகளில் ஒன்றாகக் கொண்டார்போலும். வடிவம் சிதைந்த வட சொற்கள் பல உண்டு என்பதையும் அவற்றுள் இசைவானவற்றை அறிஞர்கள் ஆட்சிப் படுத்தியுள்ளனர் எனவும் அவரே கூறுவர் (தொல். 835).

மேலே கூறிய விளக்கங்களின்படி ஆய்தம் ஒரு வடமொழிச் சிதைவு என்றே ஆகும். இவ்வாறு கொள்வது ஆய்த ஒலி ஓர் இரவல் ஒலி என்ற கருத்தை தருவதாகாது.

# ஜப்பானைப் பாருங்கள்

இரண்டாவது உலகப்போரில் நொறுங்கிப் போன ஜப்பான் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. மின்கருவிகளும், வானொலியும், டெலிவிஷனும் அங்கு குடிசைத் தொழில் போலப் பெருகி விட்டன. உலகத்திலேயே கப்பல் கட்டும் தொழிலில் ஜப்பானியருக்கே முதலிடம். மணிக்கு 360 மைல் வேகத்தில் ஓடும் ரயில் வண்டிகளும் அங்குதான். நூற்றாண்டினை நெருங்கும் அசாகி சிம்புன் என்னும் நாளிதழின் விற்பனை அறுபது லட்சம். அதிக அளவில் நூல்கள் எழுதுவதிலும் ஜப்பானியரே. எழுத்தாளர்களுக்கு அப்படியொரு உற்சாகம் ஊட்டுகின்ற வாசகர்களும் அங்கு அதிகம்.

ஜப்பானியர் சராசரியாக ஆண்டுக்கு இருபது புதிய நூல்களையும் 25 வார மாத இதழ்களையும் படிக்கின்றனர். 1985-ஆம் ஆண்டில் மட்டும் ஜப்பானில் 3!,221 நூல்களும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வார, மாத இதழ்களும் வெளியாகியுள்ளன. பிற நாடுகளைப் போல எழுத்தாளர்கள் கையெழுத்துப் பிரதிகளை வைத்துக்கொண்டு வெளியிடுவோரை நோக்கி இங்கு அலைவதில்லை. எழுத்தாளரை ஆடம்பரமான உணவு விடுதியில் தங்க வைத்து எழுதச் செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் பிரதியைப் பெற்றுக் கொள்கின்றனர். ஒரு இலக்கிய மாத (Bungei Shunju) இதழினைத் துவக்கிய கான்கிக்குச்சி என்பாரே இந்தப் பழக்கத்தினை அறுபது ஆண்டுக்கு முன் ஏற்படுத்தியவர். கெனிச்சி தகுமோரா என்னும் எழுத்தாளர் 350 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஆனால் பேனாவைத் தொடுவதில்லை. சொகுசு நாற்காலியில் வசதியாக அமர்ந்து குறிப்புகளின் துணையோடு பேசத் தொடங்குவார். அவரது ஒலியைப் பதிவு செய்யும் நாடாக்களை தட்டச்சில் ஏற்றி, திருத்திச் செப்பமுறச் செய்தற்கு இளம் எழுத்தாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நமது நாட்டில் கவி காளமேகம் கூட வேறு ஒரு புலவரோடு வாது செய்யும் போது தூது ஐந்து நாழிகையிலும், துகளிலா அந்தாதி ஏழு நாழிகையிலும், பார காவிய மெலாம் ஓரிரு தினத்திலேயும் பகரக் கொடி கட்டினேன் என்றாராம். ஜப்பானில் அது உண்மையாகிக் கொண்டிருக்கிறது.

—நியூஸ் வீக்.

# "காவடி வரலாறு"

டாக்டர் மு. மாணிக்கம்,
தமிழ்ப் பேராசிரியர்,
பழனி.

"காவுதடியே 'காவடி' யாகி இருக்கவேண்டும். காவுதல் என்பது கட்டித் தொங்கவிட்டுச் சுமத்தல் என்ற பொருளைத் தருவதாகும்" (1) என்கிறார் ஏ. என். பெருமாள். தமிழ்ப் பேரகராதியில் காவு என்பது சிறு தெய்வங்களுக்கு இடும் பலி என்றும், காவுதல் என்பது தோளாற் காத்தண்டு சுமத்தல் என்றும், காவாளர் என்பது காவடி சுமப்போர் என்றும் பொருள் தரப்பட்டுள்ளது. 'மறித்தோள் நவியத்து உறிக்காவாளரொடு' (2) என்று சிலம்பில் வருகிறது. புறநானூற்றில் ஔவையார் தம் பாடலொன்றில் 'காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை' (3) என்று கூறுகிறார். இதில் 'காவினெம்' என்ற சொல் தான் பயன் படுத்தும் பொருள்களைக் கட்டித் தொங்கவிடப்பட்ட பையை உடைய தண்டினைத் தோளில் தூக்கினேன் என்னும் பொருள் தருகிறது. வள்ளுவரும்

'காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து' (4)

என்கிறார். உயிரையே காவடியாகக் கொண்டு இரு பக்கங்களிலும் காமமும் நாணமும் தொங்கும் என்பது காவடியின் பயனை வள்ளுவர் காலத்தும் அறிந்திருந்தனர் என்பதைப் புலப்படுத்து கிறது. 'கா' என்பதே காவடியைக் குறிக்கும் சொல்லாக இருந்திருக்கிறது.

இறைவனின் அனுக்கிரகம் பெறக் காவடி ஒரு கருவியாக அமைவதால் தம்மைக் காக்கும் வடிவமாகக் காவடி என்பதைக் குறிக்கின்றனர். இப்பொருளுக்கேற்பக் காவடிப் புராணம் சொல்லப் படுகிறது.

பராசரர் ஒரு மாமுனிவர். அவர் நாள்தோறும் இறைவனுக்குப் பூஜை செய்வதில் அவருடைய ஆறு குமாரர்களும் உதவியாக இருந்தனர். ஒருநாள் அந்த ஆறு குமாரர்களும் தந்தையின் பூசைக்குரிய உதவிகளைச் செய்யாமல் கடலில் சென்று ஓடம் விளையாடிக் கொண்டிருந்தனர். பராசரர் தன் தவ ஆற்றலால் தன் குமாரர்கள் கடலில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். கடமையைச் செய்யாமல் விளையாடிக் கொண்டிருந்த குமாரர்களைச் சினந்து அவர் அனைவரும் மீன் பரதவராக ஆகக் கடவர் எனச் சபித்தார். அவர்களும் உடனே பரதவராயினர். அவர்தம் அவலநிலை கண்ட நாரதர் "நீங்கள் திருப்பரங்குன்றம் சென்று அங்குள்ள சரவணப் பொய்கையில் மீன்களாகக் கடவீர்" என்று அருள்பாலித்தார். திருப்பரங்குன்றத்தில் மீன்களாகப் பொய்கையில் உலவித் திரிந்த அவர்கள் முருகனை நினைந்து துதித்தனர். சூரனை வதை செய்யத் திருச்செந்தூர் போய்க்கொண்டிருந்த முருகன் "நான் சூரசம்மாரம் செய்யச் செல்கிறேன். சூரன் வதை முடித்து வந்து உங்களுக்கு அனுக்கிரகம் செய்கிறேன்" என்று சொல்லிப் போந்தார். சூரனை வதை செய்துவிட்டுத் தெய்வயானையைத் திருமணம் செய்ய முருகன் திருப்பரங்குன்றம் வந்தார். அப்போது மீன் வடிவத்தில் இருந்த பராசர குமாரர்களைப் பார்த்து "நீங்கள் எல்லாம் 41 நாள் தவம் செய்து என்னைச் சென்னிமலையில் வந்து தரிசித்தால் அனுக்கிரகம் செய்கிறேன்" என்றார். அறுவரும் முருகன் அருளியவாறே 41 நாள் தவமிருந்து முருகனைக் காண விரும்பினர். முருகனைக் காணச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லாமல் காணிக்கை கொண்டு செல்ல விரும்பினர். நான்கு வேதங்களையும் நான்கு கால்களாக வைத்து நடுவில் சுசம்னா நாடியைத் தண்டாக வைத்து ஒரு பக்கம் விநாயகரும் ஒரு பக்கம் முருகனும் வைத்து அலங்கரித்தனர். பின்பு சேடசோ அபிடேகப் பொருள்களை முத்திரையாகக் கட்டி அதைப் பூசை செய்து மேளதாளத்துடன் அரகரா முழக்கமிட்டுச் சென்னிமலை ஆண்டவருக்கு அபிடேகஞ் செய்தனர். அவர் தம் செயல் கண்டுமகிழ்ந்த முருகன் அவர்களின் சாபத்தை நீக்கியருளியதுடன் அவர்களைப் பார்த்து "இந்தக் கலியுகத்தில் நீங்கள் எனக்கு அபிடேகஞ் செய்தது போல் யார் யார் செய்கிறார்களோ அவர்களுக்கு வேண்டிய புருஷார்த்தங்கள் முழுவதையும் அனுக்கிரகம் செய்கிறேன்" என்றார் என்று காவடியின் வரலாறு கூறப்படுகிறது.

முருகனுக்குப் பக்தர்கள் எடுக்கும் காவடிகள் 36 என்று கூறப்படுகிறது. அவையாவன : பால் காவடி, பன்னீர்க் காவடி, சர்க்கரைக் காவடி, பூக்காவடி, சந்தனக் காவடி, பழக்காவடி தீர்த்தக் காவடி, அக்கினிக் காவடி, நெய்க்காவடி. தைலக் காவடி விலங்குக் காவடி, வேல்காவடி, கர்ப்பூரக் காவடி, விபூதிக் காவடி அன்னக் காவடி, இளநீர்க் காவடி, செருப்புக் காவடி, தேன் காவடி, சொர்ணக் காவடி, இரத்தினக் காவடி, தானியக் காவடி, மஞ்சள் காவடி, மாப்பொடிக் காவடி, அவல் காவடி, பானகக் காவடி, விளக்குக் காவடி, பாவைக் காவடி, பச்சிலைக் காவடி, பாண்டக் காவடி, ஆயுதக் காவடி, பஞ்சவாசக் காவடி, மச்சக் காவடி. சர்ப்பக் காவடி, சேவல் காவடி, சோதனைக் காவடி, முத்திரைக் காவடி, இவற்றில் முத்திரைக் காவடிக்கு உபசாரக் காவடி என்றும் பெயர். மச்சக் காவடி, சேவல் காவடி, சர்ப்பக் காவடி மூன்றையும் சேர்த்துச் சோதனைக் காவடி என்றும் கூறுவர். இங்கு கூறிய 36 வகைக் காவடிகளே அல்லாது வேறு சில வகைக் காவடிகளும் உண்டு.

“தோளிற் பொருட்களைச் சுமக்கப் பயன்பட்ட காவு, தடியே காவடிகளாக மாறின. ஆரம்பத்தில் அவசியப் பொருளாகப் பயன்பட்ட இவைகள் நாளடைவில் அழகிய வடிவம் பெற்று, ஆண்டவனுக்குரிய வழிபாட்டுப் பொருளாக மாறின. முன்பு ஆண்டவனின் காவு பலிக்குப் பொருட்களைச் சுமக்கப் பயன்-பட்ட இவை இன்று நற்பொருட்களைச் சுமக்கும் சிறப்புப் பெற்று விளங்குகின்றன” (5). “நெடுந்தூர வழி நடந்து கோவிலுக்கு வரும் பக்தர்கள் ஆண்டவனின் பூசைக்கான பொருள்களையும் தனித்தனியாகக் கட்டி ஒரு தடியின் உதவி கொண்டு தோளின் இரு புறங்களிலும் தொங்கவிட்டுச் சுமந்து வந்திருக்கக் கூடும். இன்றுங்கூட ஐயப்பன் மலைக்குச் செல்லும் பக்தர்கள் இருமுடி கட்டிக் காணிக்கைப் பொருள்களை ஒரு முடியிலும், தம் தேவைக்-கான பொருள்களை இன்னொரு முடியிலும் சுமந்து செல்வதைக் காணலாம். இதுவே காவடியின் உற்பத்தியெனலாம்” (6) என்-கிறார் செ. அன்னகாமு.

காவடிகள் எடுத்து இறைவனை வணங்கும் வழக்கம் பிற்-கால வழக்கே என்கிறார் இரா. வைத்தியநாதன் (7). ஆனால் கு. அழகிரிசாமி “முருகன் கோவிலுக்குக் காவடி தூக்கும் பழக்கம்

முதன் முதலில் எப்பொழுது ஏற்பட்டது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை" (8) என்று கூறியுள்ளார். இருப்பினும் இவ்வழக்கம் மிகப் பழையது என்று சொல்ல முடியாது என்று கருதி "இவ் வழக்கம் சமீப காலத்தில் ஏற்பட்டது என்றே கருத வேண்டும்"(9) என்கிறார். யோகி சுத்தானந்த பாரதியார் "தமிழர் முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் தொன்று முதல் உண்டு" (10) என்கிறார்.

முருகனைப் புகழ்ந்து பாடும் பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சங்க நூல்களில் முருகனுக்குக் காவடி எடுத்ததாக இல்லை. சங்க காலத்தில் எல்லாம் சுமைகளை எளிதாக எடுத்துச் செல்ல தோளில் வைக்கப்படும் தண்டினையே காவடியாகப் பயன்படுத்தினர் எனத் தெரிய வருகிறது. பழைய இலக்கியங்களில் காவடி என்று வருவதெல்லாம் தோளினில் ஒரு தண்டினை வைத்து அதன் இரு பக்கங்களிலும் சுமைகளைத் தொங்கவிட்டுச் சென்றதையே குறிப்பதாகும். பிற்காலச் சோழர் காலத்தில்கூட முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை.

"முருகன் கோயில்கள் பெரும்பாலும் மலையின்மீது இருப்பதை அறிவோம். அங்கு இறை வழிபாட்டுக்குச் செல்வோர் பல வகையான படையல் பொருட்களையும் தங்களுக்கு வேண்டியவற்றையும் சுமந்து செல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது. மலைமீது நடக்கும்போது பொருட்களை ஒரு கம்பில் தொங்க விட்டவாறு தோளில் தூக்கிக்கொண்டு செல்வது வசதியாகவும் எளிதாகவும் இருக்கும். காவு தடியைக் கையால் பிடிக்க வேண்டிய தேவை இல்லை. அதைச் சமன்படுத்திச் சுமந்தால் கையை வீசியவாறு மலைமீது ஒய்யாரமாக நடந்து செல்லலாம். சுமைப்பளுவும் குறையும். நடை வேகமும் கூடும். ஆகையினால் இத்தகைய வசதியை நினைத்து முதலில் மனிதன் காவு தடியைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்" (11). கழுகு மலை முருகன் கோயிலுக்குக் காவடியெடுக்கும் வழக்கம் பன்னெடுங் காலமாக இருந்துள்ளது. (12) என்கிறார் ஏ.என். பெருமாள். யோகி சுத்தானந்த பாரதியாரும் ஏ.என். பெருமாளும் முருகனுக்குக் காவடி எடுப்பது பன்னெடுங்காலமாக இருந்துள்ளது என்று சொன்னாலும் இக்கருத்தை உறுதிப்படுத்த இலக்கியச் சான்று ஏதும் இல்லை. இக்கருத்து வெறும் ஊகமாகவே கொள்ளத் தக்கது.

முருகனுக்கு அடியார்கள் எதற்காகக் காவடியெடுக்கின்றனர்? முருகனை நினைத்து வேண்டுவோர் தம் காரியம் கைகூடும் பொருட்டு முருகனுக்குக் காவடி எடுப்பதாக மனத்தில் வேண்டிக் கொள்வர். தாம் நினைத்த காரியம் கைகூடியதும் முருகனருளால் தான் கைகூடியது என்று கருதி நேர்த்திக் கடனைச் செலுத்தும் வகையில் காவடி எடுப்பர். காவடி எடுப்போர் முறைப்படி விரதம் இருந்து காவி அணிந்து காவடி எடுப்பர். ஆண்களைப் போலவே பெண்களும் காவடி எடுப்பதுண்டு. சிறுவர்கள்கூடக் காவடி எடுத்துச் செல்லுவதைப் பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் போன்ற இடங்களில் காணலாம்.

காவடி எடுத்துச் செல்லும்போது வழிநடை வருத்தம் தெரியாதிருக்க இனிய இசையுடன் முருகன் புகழ் பாடிச் செல்வதுண்டு. அவ்வாறு அவர்கள் பாடிச் செல்வது இசைப்பாடலாக — சிந்துப் பாடலாக - - - இருப்பதால் காவடிச் சிந்து என்று அப்-பாடலைக் கூறலாயினர். காவடி எடுத்துச் செல்வோர் எப் பொழுதும் தம் ஊரிலிருந்து முருகன் கோயில் இருக்கும் ஊர் வரையில் கால்நடையாகவே முருகன் புகழை இசையுடன் பாடிக் கொண்டே செல்வர்.

பி.வி. செகதீச ஐயர் தமது 'தென்னிந்திய வழக்கங்கள்' எனும் ஆங்கில நூலில் 'காவடி' என்ற சொல்லைக் காவு அடி எனப் பிரித்துப் பொருள் கூறியுள்ளார். முருகன் கோயிலுக்குத் தாம் செல்லும் வழி முழுவதையும் கால்நடையாகவே நடந்து செல்வதாக எடுத்துக் கொள்ளும் வாக்குறுதி என்று பொருள் கூறுகிறார் (12). அன்னக்காவடி என்ற சொல் முருகனடியார் தமது தோளில் காவடி எடுத்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று சோறு வாங்கி வந்து அதனைத் தாம் மட்டும் உண்டு பசி போக்-காமல் யார் யார் பசியால் வாடுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் முருகன் பெயரால் அன்னமளிப்பதைக் குறிக்கிறது என்றும் அவரே கூறுகிறார் (13). இக்காவடி முருகனுக்கு எடுக்கும் காவடி போல அலங்கரிக்கப்பட்டதாக இராமல் தோள்மீது வைக்கப்படுகின்ற ஒரு தண்டின் இருபக்கமும் சோறு வாங்கப் பாத்திரங்களைத் தொங்கவிட்டதாக இருக்கும். அப்பாத்திரங்களில்தான் சோறு வாங்குவர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் விரதிகள்தான் இந்த அன்னக்காவடியைத் தாங்கிப் பிறரிடம் சென்று உணவு வாங்கித்

தேவையான ஏழைகளுக்கு வழங்குவர். இதுவும் ஒருவகை இறை வழிபாடேயாகும். புனிதச் சொல்லான அன்னக் காவடி என்பது இப்பொழுது பரம ஏழை என்னும் பொருளில் வழங்கக் காண்கிறோம். அதன் புனிதம் மறைந்துவிட்டது.

"காமம், குரோதம் முதலிய தீய பண்புகளைக் காவடி போல் கட்டித் தூக்கி வந்து முருகன் அருள்பெற்று அவற்றை விட்டொழிக்கும் குறியீட்டுச் சடங்கு இது என்று இதற்குத் தத்துவ விளக்கமே சொல்லப்படுகிறது" (14).

முன்பெல்லாம் தோளில் சுமக்கும் தண்டின் இருபக்கம் உறி கட்டி இரண்டு பாத்திரங்களைத் தொங்கவிட்டுக் கொண்டு அடியார்கள் பல வீடுகளுக்கும் சென்று கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்காகப் பாலும், தமக்குப் பொங்கியுண்ணக் கூலியாக அரிசியும் வாங்கிப் போதல் உண்டு என்றும், பாலைக் கோவிலில் அபிடேகத்துக்காகக் கொடுத்துவிட்டு அரிசியை மட்டும் சமைத்துத் தாமும் உண்டு பிறர்க்கும் உண்ணக் கொடுப்பது உண்டு என்றும் பேராசிரியர் க வெள்ளைவாரணனார் கட்டுரையாளரிடம் கூறினார்.

"வேல் காவடி எடுப்போர் உடம்பில் ஆயிரத்து எட்டு, நூற்றி எட்டு என்ற கணக்குகளில் வேல்களைக் குத்திக் கொள்வர்" (15).

நம் ஊர்களில் மட்டுமன்றி தமிழகத்திலிருந்து சென்று தென் ஆப்பிரிக்காவில் வாழும் தமிழர்களும் நாக்கில் வேல் குத்திக் கொள்ளாது, உடம்பில் ஊசி குத்திக் கொள்வது போன்ற வேண்டுதல்களைச் செய்கிறார்கள். டர்பன் நகரில் இந்திய மக்கள் வசிக்கும் பகுதிகளில் இந்தச் சமயச் சடங்குகள் ஆண்டு தோறும் நடைபெறுகின்றன. இவ்வாறு வேல் காவடி எடுப்பதன் நோக்கம் தாங்கள் செய்த பாவங்களால் கோபமடைந்துள்ள தெய்வங்களைச் சாந்தப்படுத்துவதற்காகவும், எதிர்கால வாழ்க்கை இன்பமாக இருப்பதற்காகவும், குழந்தை இல்லாத மலடிக்குக் குழந்தைப் பேறு உண்டாவதற்காகவும், சாகக் கிடக்கும் உறவினர் பிழைத்து எழுவதற்காகவும் என்று கூறப்படுகிறது.

தைப்பூசத் திருவிழாவுக்கு ஆண்டுதோறும் செட்டிநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கானவர் பல நாள் விரதமிருந்து கால்நடையாகவே பழனிக்கு வந்து முருகனை வணங்கிச் செல்கின்றனர். இவ்வாறு செட்டிநாட்டு மக்கள் கால்நடையாகக் காவடி எடுத்து வரும் வழக்கம் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது கேரளாவிலும் காவடி எடுக்கும் வழக்கம் உண்டு. கொடுங்களூர், சாமக் காவல், சோத்தானிக்கரை, பதினெண்ணார் காவல் முதலிய ஊர்களில் உள்ள பத்திரகாளி கோயில்களுக்கு மலையாளிகள் காவடிகள் எடுக்கிறார்கள். கொடுங்களூரில் பங்குனி மாதம் பரணி நாளிலும், சாமக் காவல், பதினெண்ணார் காவல் என்ற ஊர்களில் சித்திரை முதல் நாளிலும் காவடி எடுக்கிறார்கள். குறட்டி மகாதேவ க்ஷேத்திரம் என்ற சிவன் கோவில் திருவல்லாவில் உள்ளது. இந்தக் கோவிலுக்குச் சிவன் ராத்திரி அன்று காவடி எடுப்பர். தமிழ் நாட்டில் உள்ள வல்ல நாட்டுக் கருப்பையா சுவாமிக்கும் சிவன் ராத்திரி அன்று தான் காவடி எடுக்கிறார்கள்.

மொரீசியஸ் என்னும் நாட்டில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கும் முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்து வருகிறது. அங்கு "தைப் பூசக் காவடியே மிகப் பெரிய திருவிழா. இது பொது விடுமுறை நாளும் ஆகும். கொடியேற்றம் தொடங்கிப் பத்து நாளும் விரதம் இருந்து காவடி எடுப்பதுண்டு. காவடியோடு மாவிளக்கு, பால்குடம் எடுப்பாரும் உண்டு. பெண்கள் மஞ்சள் ஆடையும், ஆண்கள் காவி நிற ஆடையும் அணிந்து காவடி எடுப்பர். பெண்டிரும், ஆடவரும் வாயில், நாக்கில் அலகுகளைக் குத்தியும், ஆடவர் உடம்பெல்லாம் அலகுகளைக் குத்தியும் சிலர் காலில் ஆணி நிறைந்த காலணிகளை அணிந்தும் ஊர்வலமாக நடந்து போவார்கள். வழிநெடுகிலும் முருகன் கடவுள் பாடல்களையும், காவடிப் பாடல்களையும், பாடிக் கொண்டும், வேல், வேல், அரோஹரா என்றும் பலவாறாக ஒலித்துக் கொண்டும் செல்வர், காவடிகள் மிக அழகாக மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இக்காவடி விழாவைக் காண பிரான்சு நாட்டிலிருந்து தொலைக்காட்சி படப்பிடிப்புநர்கள், சுற்றுலாப் பயணிகள் வருவதுண்டு. சித்திரை பௌர்ணமியிலும் காவடி எடுப்பதுண்டு என்னும் செய்தி மொரீசுக்குச் சென்று வந்த புட்பரதம் என்பார் தரும் செய்தியாகும்.

தமிழகத்தில் முருகன் கோவில்களுக்கேயல்லாமல் மாரி-யம்மன் கோவிலகளுக்கும் வேப்பிலைக் காவடி, சவக் காவடி, அக்கினிக் காவடி, பூக்காவடி போன்றவற்றை எடுக்கிறார்கள். எல்லாமே நேர்த்திக் கடன் தான்.

பழனித் தலபுராணம் காவடி தோன்றிய வரலாற்றைக் கூறுகிறது. அத்தலபுராணத்தைப் பாடியவர் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். அது பற்றி புராணம் கூறும் கதை வருமாறு: அகத்தியர் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தார். சிவன் அவர்க்கு முன் தோன்றி "உமக்கு யாது வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அகத்தியர் "தேவரீரும் எமது தாயாகிய உமாபிராட்டியாரும் தேவர்களால் வணங்கப்-படுகின்ற இரண்டு மலையாக ஒன்று சேர்ந்து நிற்றல் எவ்விடத்-துள்ளதோ அதனை அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்றார். அதற்குச் சிவன் "முனிவனே! குமரன் வீற்றிருப்பதாகிய கந்த மலையிடத்தில் காணப்படுகின்ற கொடு-முடிகளுள் சிவம், சக்தி என்னும் பெயரைப் பெற்ற அருமையான நல்ல சிகரங்களுள் இரண்டாக யாமும் உமையும் இருப்போம். அவ்விரண்டையும் தேவர் முதலானோர் வழிபாடும் வணக்கமும் எந்த காலமும் செய்வார்கள்" என்றார். அகத்தியர் அந்த இரு கிரிகளையும் வலம் வந்தார்; துதித்தார். சிவனும் சக்தியும் முருகனுடன் காட்சி கொடுத்தனர். "இச்சிகரங்கள் இரண்டையும் ஒப்பிலாத தென் திசையிற் சேர்த்துப் பூசை செய்யும் வரத்தைத் தந்தருள்க" என்று அகத்தியர் வேண்ட சிவனும் அவ்வரம் தந்து மறைந்தான்.

சிகரங்கள் இரண்டும் முனிவரின் கையகம் புக்கன. இரண்-டையும் பூர்ச்சவ வனத்தில் வைத்துவிட்டு முனிவர் காசி சென்று இறைவனை வழிபட்டுத் தென் திசை வந்து பொதியமலையில் தங்கினார். சிறிது காலத்திற்குப் பின்னர் அச்சிகரங்கள் இரண்-டையும் தென் திசைக்குக் கொணர விரும்பிப் புறப்படும்போது இடும்பன் அவர் எதிரே வந்தான். அவன் முனிவரின் சொற்படி வடக்கே சென்று இரண்டு மலைகளையும் கொண்டுவரப் புறப்-பட்டான்.

இடும்பன் வடக்கு நோக்கிச் சென்று பூர்ச்சவ வனத்தில் இரண்டு சிகரங்களும் இருக்கக் கண்டு வணங்கினான். ஓராண்டுக் காலம் தவம் செய்தான். அகத்தியர் சொல்லித் தந்த பஞ்சாட்சரத்தை உச்சரித்துத் தவம் செய்தலால் புயதண்டமென்று சொல்லும்படி பிரம்ம தண்டும், சிகரங்களை அத்தண்டில் கட்டித் தொங்கவிட ஏதுவாகக் கயிறுகள் போலப் பாம்புகளாகிய கயிற்றுக் கட்டங்களும் வந்து பொருந்தின. உறிபோல அமைந்த அந்தப் பிரம தண்டையும் அதில் தொங்கவிட்டிருக்கும் சிகரங்களையும் இடும்பன் அகத்தியர் கூறிய மூல மந்திரத்தை உச்சரித்து அவரை நினைந்து மேலே தோளுக்குத் தூக்கினான்; மலைகள் இரண்டும் எளிதாக மேலெழும்பின. இரண்டு பக்கமும் பாம்புக் கயிற்றால் பிணைக்கப்பட்ட மலைகள் தொங்க பிரம்ம தண்டைத் தோளில் காவடி போல் சுமந்துகொண்டு இடும்பன் தென் திசை நோக்கி வந்தான். திருவாவினன்குடி எனனும் இடத்தை அடைந்தபோது தாகமாக இருக்கிறது என்று இரண்டு மலைகளையும் இறக்கி சிவமலை, சக்தி மலை என்னும் அந்த இரண்டு மலைகளுக்குப் பக்கத்தில் பள்ளம் தோண்டி நீர் பருகினான். பின்னர் அம்மலைகளைத் தூக்கினான்; தூக்க முடியவில்லை. அகத்தியர் சொல்லித் தந்திருந்த மூலமந்திரத்தை மறந்தான். ஏன் இப்படி என்று ஒன்றும் புரியாமல் நடுக்கமுற்றான். அப்போது சிவகிரியின் மேலே குரா மரத்தில் அருகே ஒரு சிறு குழந்தை நிற்கக் கண்டான். அக்குழந்தை உண்மையில ஏதோ ஒரு மாய அரக்கனாக இருக்கக் கூடும் என்று கருதி அருகில் சென்று வினவினான், சிறுவன் பதில் சொல்லாது சிரித்தான். அதுகண்டு கோபமுற்ற இடும்பன் "சிறுவனே! நீ புன்முறுவல் செய்ததற்குக் காரணம் யாது? புகல்வாய். யான் கொலைத் தொழில் செய்யும் அசுரன் என்றறி'' என்றான். அதற்கு அக்குழந்தை அசுரனே! இம்மலைகள் நம்முடைய இருப்பிடமாகும். வலிமை நினக்கிருந்தால் கொண்டு செல்லுதி'' என்று சொல்லச் சினமுற்ற இடும்பன் அச்சிறுவன் மீது பாய்ந்தான்; ஆனால் பாய்ந்த வேகத்தில் அலறி விழுந்து இறந்தான்.

அவ்விடத்தினின்றும் பாம்புக்கும் பிரம தண்டும் எழுந்து சென்று அகத்திய முனிவர்க்கு நிகழ்ந்தவற்றைச் சொல்லி தங்கள் தங்கள் இருப்பிடம் சேர்ந்தன.

இடும்பன் இறந்த செய்தி கேட்டு இடும்பி ஓடிச் சென்று அழுது புலம்பினாள். எதிரே முருகன் தோன்றக் கண்ட "இன்று எனது நாயகனை அடிமை கொண்டாய். தேவ நாயகனே! எனக்குத் திருமாங்கல்யப் பிச்சை தந்தருள வேண்டும்" என்று வேண்டினாள். முருகனருளால் இறந்த இடும்பன் உயிர் பெற்று எழுந்தான். அவனைப் பார்த்து "இடும்பனே! இம்மலைகள் இந்தப் புண்ணிய பூமியிலே இருக்கட்டும். நாம் இதில் எழுந்தருளியிருப்போம், நீ இம்மலையின் அடிவாரத்தில் இருந்து காவல் புரிக. நீ சத்திகிரி, சிவகிரிகளைக் காவடியாகக் கட்டிக் கொணர்ந்தது போல் அடியார்கள் காவடி கொணர்ந்து என்னை வழிபடுக. உன்னை வழிபட்டு என்னை வழிபடுவார் களாக. உன்னை வழிபடுவோர் என் கருணைக்குரியவர்கள் ஆவார்கள். என்று கூறியருளினார். எம்பெருமான் கட்டளைப்படி இடும்பன் சிவகிரி மலையின் அடிப்பகுதியில் இருந்தனன். அன்பர்கள் மலர், பால், சர்க்கரை, பன்னீர் முதலியவற்றைக் காவடிகளாகக் கொணர்ந்து இடும்பனை வழிபட்டு முருகனை வழிபடுவாராயினர்.

இக்கதை 17 - ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட பழனித் தல புராணத்தில் தான் முதன் முதலாகச் சொல்லபபட்டுள்ளது. இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்திருக்க வேண்டும் அதற்கு முன் எவ்வளவு காலமாகக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்தது என்று சொல்ல இயலாது. எனினும் சுமார் முன்னூறு அல்லது நானூறு ஆண்டுகளாகவே முருகனுக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது என்றும் முருகனைப் பற்றிக் கூறும் சங்க இலக்கியப் பகுதிகளில் காவடி பற்றிய குறிப்பு இல்லை என்றும் துணிந்து கூறலாம்.

## குறிப்புகள்.

1. டாக்டர் ஏ. என். பெருமாள்
   தமிழக நாட்டுப்புறக் கலைகள் (ப.74)
2. சிலப்பதிகாரம்.
   அடைக்கலக் க தை — 25
3. ஔவையார்
   புறநானூறு (206)
4. திருக்குறள் (1163)
5. இரா. வைத்தியநாதன்,
   "கந்தனும் காவடிச் சிந்தும்"
   பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, 6571-(ப.)
6. செ. அன்னகாமு,
   ஏட்டில் எழுதாக் கவிதைகள்
7. இரா. வைத்தியநாதன்,
   "கந்தனும் காவடிச் சிந்தும்"
8. கு. அழகிரிசாமி,
   சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச் சிந்து முன்னுரை (ப. 13)
9. மேலது,
   ப. 13.
10. யோகி ஸ்ரீ, சுத்தானந்த பாரதியார்:
    காவடிச் சிந்து,
    அண்ணாமலை ரெட்டியார் (ப. 41)
11. டாக்டர் ஏ. என். பெருமாள்.
    தமிழக நாட்டுப்புறக்கலைகள், (ப. 74 75)
12. P.V Jagadisa Ayyar,
    South Indian Customs, (p. 136)
13. Ibid,
14. டாக்டர் இராம. சுந்தரம்,
    "காவடிச் சிந்தில் கவிதை இனிமை",
    திருச்சி வானொலிப் பேச்சு.
15. டாக்டர் ஏ, என். பெருமாள்.
    தமிழக நாட்டுப் புறக் கலைகள்: (ப. 75)

# திருப்புகழின் சமரச நோக்கும் பொருள் நயமும்

(சு. சந்தானகோபாலன்
ஒய்வுபெற்றபதிவாளர்,
இந்திய தொழில் நுட்பக்கழகம். சென்னை)

இறைவன் புகழை இசையோடு பாடி இன்புறவேண்டும் என்ற நோக்குடனும் தான் பெற்ற இன்பத்தை மக்கள் எல்லோரும் பெற வேண்டும் என்னும் நன்னோக்கத்துடனும் முற்காலப் பெரியோர் அரிய பெரிய பொக்கிஷங்களைவிட்டுச் சென்றிருக்கின்றனர். அவருள் ஒருவரே அருணகிரிநாதர். முருகப் பெருமானுக்குப் பாமாலை அணிவித்தவர்களில் அருணகிரிநாதரும் ஒருவர். அவர் இயற்றியநூல்களில் ஒன்று திருப்புகழ். அவரது வாழ்க்கை வரலாறு திருப்புகழுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றது. ஏனெனில் தன் வாழ்நாளில் பல இடர் பாடுகளுக்குப் பின் முருகனின் தரிசனம் பெற்று, அவனது அருளால் அவனை அவர் பாடிய சந்தப் பாக்களின் தொகுப்பே "திருப்புகழ்" என்பதால் அவரது வாழ்க்கையோடு இணைந்து விட்டது அந்நூல் எனலாம். முருகப் பெருமானின் அருளால் புனிதராகி, சிவஞானச் செல்வராகி, தேனூறும் தமிழில் "முத்தைத் தரு" என முதலடி தொடங்கி, தமிழ்நாட்டிலுள்ள எல்லா முருகத் தலங்களுக்கும் சென்று பாடிய பாக்கள் தான் திருப்புகழ். அவர் வேத உபநிஷத் ஆகம புராணங்களின் அரிய நுட்பங்களை இசைத் தமிழ் பாடலாக்கி யாவரும் அறிந்து, ஒழுகக்கூடியவாறு எளிதான அறநெறியைக் காட்டிய ஒரு பெருந்தகையார். இவரது உயர்வைப் பாராட்டித் தாயுமானவர் கூறுகிறார்.

ஐயா அருணகிரியப்பா உனைப் போல்
மெய்யாக யார் சொல் விளம்பினரய்யா?

இவர் அருளிய நூல்கள் பல. அருணகிரி என்றால் நமக்குத் திருப்புகழ் தான் நினைவில் வரும். ஆனால், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் முதலியவைகளையும் இவர் இயற்றி இருக்கிறார்.

திருப்புகழின் தத்துவம்: முருகன் யார்? அவனை அறியும் வழி என்ன? அவன் தான் மும்மூர்த்திகளுமாகி, அவர்களுக்கும்

மேலாகி, எல்லாமுமாகி நின்ற தத்துவம் என்றும் எல்லாத்தெய்வங்களும் முருகனின் வெளிப்பாடே என்பதும் அவரது கருத்து. அவரது சமரசநோக்கு, திருப்புகழில் ஊடுருவி நிற்கிறது. அநேக பாக்களில் திருமால் முருகன் என முருகனைப் பாடி மகிழ்கின்றார். அவரது பாடல்கள் சைவ வைணவ சமரச நோக்குடன் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆன்மாவானது ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலத்தை ஒழித்துத் தெய்வத்தை அடைய வேண்டிய நெறியைக் குறிப்பிடுகின்றார். ஆசைகளும், ஆணவமும், அடங்கப் பெற்றாலன்றி முருகனை அணுக முடியாது. ஆசையை அகற்றினால் அன்றி வினை தீராது வினையே விதி. விதியைத் தாண்டுவதே கதி. அக்கதியைப் பெற வேண்டுமாஎல் முருகனின் நாமமும் முருகன் பால் பக்தியும் இன்றியமையாத துணை என்கிறார்.

---

## பிரம்மசாரி — ஒரு சொல் விளக்கம்

பிரம்மச்சாரி என்பது வடசொல். காயத்ரி மந்திரத்தை முறைப்படி ஓதி, அதனை வாழ்விலும் பின்பற்றுவோனே பிரம்மச்சாரி எனப்படுவான். பிரமத்தை அறியும் வழியில் செல்லுபவன் என்பதே இதன் பொருள். நடைபாதையில் செல்வோனைப் பாதசாரி என்பது போல. பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்கும் முத்தி நிலை அடைதற்குரிய படிகளாகும். இந்நான்கனுள் முதற்படியினைக் கடப்பவனே பிரம்மச்சாரி ஆவான்.

முந்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்த மலம் அறுத்துப் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்

அச்சோவோ—

என்னும் மணிவாசகர் வாக்கு ஈண்டு சிந்தித்தற்குரியது.

---

தனது ஆழ்ந்த உணர்ச்சிகளையும், தன் மனோநிலையையும், அதன் அவஸ்த்தையையும் பரம்பொருளாகிய முருகப் பெருமானுக்கு இசை மூலம் அருணகிரியார் அறிவித்தருளினார். எப்படி இசையானது தியாகராஜ ஸ்வாமிகளுடைய உயர்ந்த பக்தியைப் புலப்படுத்த ஒரு கருவியாக இருந்ததோ, அதே போல், இம்மை நீத்து வீடு அடைதற்கு இசை ஒரு கருவியே என நிரூபித்தும் வாழ்ந்தும் காட்டினார் அருணகிரி. இருவருடைய வாழ்க்கைகளும் ஸ்ரீ தியாகராஜரது வாழ்க்கைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அது என்னவென்றால் தியாகராஜர் பிறப்பு முதல் இறப்பு வரையில் மிக்க சுத்தராக வாழ்ந்தார். ஆனால் அருணகிரிநாதர் பணம் தேடி சிற்றின்ப வாழ்க்கையில் செலவிட்டு, அதனால் கொடிய நோய் தீண்டி நலிந்தார். பிறகு முருகப் பெருமானின் அருள் பெற்றுப் புனிதராகி, சிவஞானச் செல்வராக, இறைவனே அவரை "திருப்புகழ் விருப்பமொடு செப்பென்" எனப் பணித்ததாக வரலாறு கூறுகிறது. "திருப்புகழ்" என்ற வார்த்தையின் பொருளைச் சற்று ஆராய்வோம். திரு என்னும் அடைமொழி இறைவனை ஞானக் கண்ணால் கண்டவர் விரும்பிய நோக்கத்தைக் குறிப்பது. அதாவது தெய்வத்தன்மையைக் குறிக்கும். புகழ் என்பது கீர்த்தி. ஆகையால் திருப்புகழ் என்றால் "தெய்வத்தின் புகழ்" என்பதே பொருள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஓரிடத்தில் "திருப்புகழ் விருப்பாற்பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா, பரஞ்சுடரே" எனப் பாடியுள்ளார். ஆகையால் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் "முருகப் பெருமானின் புகழ்" எனப் பொருள் படல்வேண்டும். எப்படி சிவபிரானுக்குத் தேவார திருவாசகங்கள் அதாவது திருமுறைகள் உகந்த துதிநூல்களாக இருக்கின்றனவோ அது போல முருகப் பெருமானுக்கு அருணகிரிநாதர் அருளிய இத்திருப்புகழ் அமைந்திருக்கிறது. இதை "செஞ்சொற்பிரபந்தம்" என அழைப்பர். "வாக்கிற்கருணகிரி" என்பது வழக்கு. ஏனெனில் திருப்புகழில் நடைச் சிறப்பும், பொருட் சிறப்பும் ஆராய்ச்சிக் குரியன.

பாக்கள் பல. எல்லாம் ஒன்று போலப் புலப்படும். ஆனால் செவிக் குணவாகவும், நாட்டில் நடப்பதைச் சித்தரித்துக் காட்டியும் இன்பம் தரும் சந்தப் பாக்களாகவும், ஒரு மனிதன் இந்த சம்ஸார

சாகரத்தில் எப்படி உழன்று, மோக வலையில் சிக்கி, வாழ்க்கையை விணாக்கிக் கொள்ளாமல் வேலவன்அருள் பெற்று, அவன் புகழ் பாடி, வீடு பெறவேண்டும் என்ற வகையில் அமைந்திருக்கின்றன. இறைவனைப் பாட அவன் அருளையும் தயையையும் பெற சந்தப் பாக்கள் தான் உகந்தவை. தம்மைக் காக்கும் பொருட்டு எமனை உதைத்த இறைவன் திருவடிகளை மார்க்கண்டேயர் அந்தப் பாக்களால் துதித்தார் என்பது புராண வரலாறு. அருணகிரியும் இவ்வழியே பின்பற்றினார்.

அருணகிரிநாதரும் பாரதம் படைத்த வில்லிபுத்தூராரும் 15-ஆம் நூற்றாண்டினர். அதாவது சம காலத்தவர். அருணகிரி நாதர் வில்லிபுத்தூராரை வாதத்தில் வெற்றி பெற்றதாக வரலாறு கூறுகிறது திருப்புகழில் வடமொழிச் சொற்கள் நிரம்ப கலந்-துள்ளன. அதனால் அருணகிரியின் வாக்கு பொலிவு பெற்றதாயும் அழகாகவும், சிறப்பாகவும் இருக்கின்றது எனக் கருதப்படுகிறது.

அருணகிரி இளமையில் சங்க இலக்கிய இலக்கணம் பயின்று சைவத் திருமுறை வடமொழி முதலியன பயின்றதாக வரலாறு கூறுகிறது இதற்குச் சான்றாகத் திருப்புகழின் நடைச் சிறப்பை-யும், பொருட்சிறப்பையும் பார்த்தால், அவரை நாற்கவிராஜர், முத்தமிழ் அரசு, நவரசநாயகர், இசைஞானியார், சந்தக் கவித்-தலைவர், தாளச்செல்வர் எனப் பல பெயரால் அழைக்கலாம் எனப் புலப்படுகிறது. 35 சூளாதி தாளங்களுக்கும் கதி பேதத்தினால் வரும் 175 தாளங்களுக்கும் இலக்கணமாக அமைந்திருக்கிறது, இது இசைவாணர்களின் ஆராய்ச்சிக்குரிய விஷயம். திருப்புகழின் சொல் நயம் வியக்கத்தக்கது.

கடுமையானசொல் வேண்டின்

"சுத்தப்பத்திச் சித்ரச்
சொர்க்கச்
சொர்க்கத்தத்தைத் கினியோனே" என்பர் முருகவேளை.

மெல்லிய சொல் வேண்டின்

"இலங்கையில் இலங்கிய
இலங்குனான் இலங்கருள் இலங்கணும்
இலங்கென-முறையோதி-இடுஞ்சுனல் குரங்கு

என்கிறார் அனுமனை

தமிழக்குரிய சிறப்பான "ழ" கார ஓசை வேண்டுமெனில்-

"வழவழென உமிழுபது
கொழகொழன
ஒழுகிவிழ'. என்பார்.

சங்கம் வளர்த்த மதுரையில் அன்றாட உரையாடலில் "ழ" சுத்தமாகக் கேட்கப் படவில்லை.

வாழ்க்கையின் படலங்களையும் புராண இதிகாச வரலாறு-களையும் முருகப் பெருமானின் திருவிளையாடல்களையும் அவனது அழகிய தோற்றத்தையும், மக்கள் மனத்தைக் கவரும் வகையில் அமைந்திருப்பதையும் வெகு அழகாக, தத்ரூபமாக வர்ணித்துக் காட்டுகிறார் திருப்புகழிலே. பெண்களை இவர் இழிவுபடுத்திக் காட்டியிருக்கிறார் எனக் கூறுவோர் உளர். ஆனால் இது பொருந்-தாது அவர் காலத்தில் பொது மகளிரின் நடத்தையைக் கண்டித்-துள்ளார் என கொள்ளவேண்டும் ஏனெனில் தன் வாழ் நாளில் நடத்தைத் தவறியதற்கு அவர்கள் பொறுப்பாளி என மனம் நொந்து மற்றவர்களும் அவர்கள் வலையில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்ற நல்ல நோக்குடனும், எல்லோரும் முருகப் பெருமானையே நினைந்து, அவன் புகழ் பாடி, நல்வழிப் பட வேண்டும் என்று தான் பாடி இருக்கிறாரே தவிர வேறு தவறாக பொருள் கொள்ளல்கூடாது. ஏனெனில் திருப்புகழுக்கு இழுக்கு நேரிடக்கூடாதல்லவா!

ராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய இதிகாசப் புராணங்களில் அருணகிரியாருக்குப் புலமை அதிகம். அதை அநேக பாக்களிலே சித்தரித்துக் காட்டி திருமால் மருகனே, முருகனே என உருகிப் பாடுகின்றார்.

(1) கல்லி லேபொற் முள்பட வேயது
நல்லரூபத் தேவரகாளிடை
கௌவை தீரப் போமிருராகவன் - மருகோனே

(2) அரியமேனி யிலங்கையி ராவணன்
முடிகள்வீழ சரந்தொரு மாயவன்
அகிலமீ ரெழுமுண்டவன் மாமரு கள் மேலும்

(3) வீரத்தால்வல ராவணனார்முடி
போகத்தானெரு வாளி யையேவிய
மேகத்தே நிகராகிய மேனியன் மருகோனே

(4) கானத்தாசிர மத்தினிலுத்தம
வேள்விச் சாலையனித்தல் பொருட்டெதிர்
காதத்தாடகை யைக் கொல்கிருபைக்கடல் மருகோனே.

அருணகிரியாரின் பாக்களில் ஆதிமூலமே என்று கதறிய யானைக்கு அருள்புரிய வந்த திருமால் மருகோனே என்று அநேக இடங்களில் குறிப்பிடுகிறார்.

(1) காதலாயருள் புரிவாய் நான்மறை
மூலமேயென வுடனே மாகரி
காண நேர்வரு திருமால் நாராயணன் மருகோனே.

இது தவிர கந்தபுராணத்திலே தசாவதாரக் கொட்டிகளையும் சித்தரித்துக் காட்டுகிறார். நரசிம்மாவதாரம். வாமனாவதாரம், ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலியவைகளும் பாடப்படு-கின்றன.

1. சிரமொடி ரணிய னுடல்கி ழியவொரு
பொழிதினுகிர்கொடு அரியனடமிடு

2. சிற்பர்த்திட்பதம் வைத்துச்
சக்கரவர்த்திக்குச் சிறையிட்டு
சுக்கிரன் அரியவிழி கெட இருபதமுமுல
கடைய நெடியவர் திருவும் அழகிய

3. தெற்குத் திக்கிலரக்கர்க்குச்சின
முற்றுப் பெற்றரசர் தற்கு புத்திர
செய முமனவலி சிலைகை கொடுகர
மிருபது கை சிரமோர் பரம்விழ
திக்கெட்டைக் கனத்தர்க்குச் சித்திர - மருகோனே

திருவாரூர் க்ஷேத்திரத்திலே பாடிய பாக்களில் :-

மாவலியைச் சிறை மண்ட ஓரடி யொட்டியளந்து
வானிவரப்பி இலங்கை அரசானோரன்

மேல் முடிபத்துமரிந்து தோளிருபத்துமரிந்து
வீரமிகுந்த முகுந்தன் - மருகோனே என பாடுகிறார்.

திருமால் எவ்வாறு பாற்கடலில் துயில் அமர்கின்றார் என்று பாடுகிறார்.

1. அரவணை தனிலேறிச் சீருடன்
விழிதுயில் திருமால் சக்ராயுதன்
அடியினை முடிதேடிக்காணவும் அறியாத''

2. பாலாழி மீரலின் மேல் திருவோடேயமணி
சேர் நீலரூபன் வலிராவண குழாமிரிய
பாரேவை யேவிய முராரியை வந்தோழனரி மருகோனே.

கிருஷ்ணனது எளிமையையும் எப்படித் திருமால் அர்ஜுனனுக்கு சாரதியாக வந்தான் என்பதையும் சித்தரித்துக் காட்டுகிறார்.

நிருப ரணமுக வாசர்கள் விலிதப
விசயன் ரதமுதல் நடவிய வெளிமையு
நிகில செகதல முரைசெயு மரிதிரு மருகோனே

மேலும் கிருட்டிணனது பால லீலைகளை விவரிக்கின்றார்.

"இடையர் மனை தோறு நித்த முறிதயிர் நெய்
பால்குடிக்க உரலொடே
இருகிட வசோதை கட்ட அழதிரு கோபாலகிருஷ்ணன்
னியல் மருகனே''

எப்படி கிருட்டிணன் துவாபர யுகத்திலே எளியோனாகி வந்து தன் பக்தர்களை ரட்சித்து ஆட்கொண்டானோ அதே போல் கலியுக வரதனான திருமால் மருகனும் அருள்பாலித்து கிருபை செய்வான் என எடுத்துக்காட்டுகிறார் அருணகிரிநாதர்.

இன்னும் அநேகச் சிறப்புகள் உடையது திருப்புகழ்.

திருப்புகழின் பொருட் சிறப்பைச் சற்று ஆராய்ந்தால் பல தத்துவங்கள் புலப்படுகின்றன.

திருப்புகழில் அன்பின் சிறப்பு, ஆறெழுத்தின் சிறப்பு—
(சரவணபவ)

அடியார்களுடன் இணங்குவதின் அவசியம், அவா அடக்கம், தகவிலரைப் புகழ்தலின் இழிவு, சமயப் போரின் பயனின்மை, ஈதலின் சிறப்பு, தொண்டின் பெருமை, யான், எனது''

என்ற நினைவு அறுபட்டாலொழிய உண்மை புலப்படாமை, பயம் நீங்க இறைவழிபாடு, கல்விச் செருக்கு அடாது, பிறவி அற-வேண்டுமாயின் இறைவழி பாட்டின் அவசியம் முதலிய உயர்ந்த தத்துவக் கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன.

இதைக் கந்தர் அலங்காரத்தில் பேசுகிறார் :-

யான் தான் எனும் சொல்
இரண்டுங்கெட்
டால் அன்றி யாவர்க்கும்
தோன்றாது சத்தியம்''

திருப்புகழின் சிறப்பைத் திருமலை முருகன் பிள்ளைத் தமிழ் பாடிய பெரியார் உகந்துபேசுகிறார் :-

“உதிருங்கனியை நறும்பாகில்
உரைத்துக்கலந்து தேனைவடித்—
தூற்றி யமுதின் உடன்கூட்டி ஒக்கக் குழைத்தருசி பிறந்து—
மதுரங்களிந்த திருப்புகழ் பாமாலை - என்கிறார்.

அருணகிரிநாதரின் உபதேசங்கள் விலைமதிக்க ஒண்ணா-தவை. சுருங்கச் சொன்னால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கவல்லது திருப்-புகழ்

திருப்புகழின் தமிழ் சில இடங்களில் தமிழர்களுக்கே வாயில் நுழைய முடியாதபடி கடினமாகத் தோன்றும். ஏனெனில் சந்தப் பாக்களால் ஆனபடியாலும், சூளாதி தானங்களுக்கு இலக்கணமாக அமைந்தபடியாலும் சில இடங்கில் - சுக்கு மி ளகுதி ப்பிலி'' என்று வரும். ஆனால் சற்றுப் பழக்கப்பட்டால் எளியதாகி விடும்.

# கீரை விதை உணவாகிறது

அரிசி, கோதுமை, வரகு, சோளம், பார்லி போன்ற தானிய வகைகளே மனிதனின் உணவுப் பொருள்கள். வளர்ந்து வரும் மனித இனத்துக்குத் தேவையான அளவு இந்தத் தானியங்கள் சிற்சில நாடுகளில் கிடைக்காமல் போகின்றன. ஆப்பிரிக்கப் பெரு நிலத்தில் பற்பல ஆண்டுகளாக மழையே காணாத எதியோப்பியா, வோல்டா, மாலி, டகோமி போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கில் மக்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கின்றனர், எனவே அடிப்படையான உணவுத் தேவையினையாவது நிறைவு செய்ய வேண்டும் என்று இன்றைய அறிவியல் உலகம் கீரை விதையினை உணவாக்கிக் கொள்ளுகின்ற ஆய்வில் ஈடுபட்டுள்ளது.

அமெரிக்க அரசு நிறுவனமாகிய தேசீய செடிகள் ஆய்வகம் தென் அமெரிக்க மெக்ஸிகோ காடுகளில் அமோகமாக வளர்ந்து, அன்றையப் பழங்குடியினருக்கு உணவாகவும் இருந்த ஒருவகைக் (amaranth) கீரைச் செடியினை ஆராய்ச்சி செய்து கொண்டுள்ளது. இச் செடியின் விதைகளைச் சற்று பருமனாகவும், அதிக அளவிலும் வறட்சி நிலையிலும் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே குறிக்கோள். இந்த ஆய்வு வெற்றி பெறுமாயின் இக்கீரை விதைகளை உலகமெங்கும் உணவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்த வறண்ட பகுதியிலும் களர் மண்ணிலும்கூட விளைவித்துக் கொள்ளலாம். ஊட்டச்சத்து (Protein) மிகுதியாக உள்ள இந்த விதைகள் மனிதகுலத்தின் பசிப்பிணியினைப் போக்கும் அருமருந்தாக அமையும். கீரையினை வேக வைத்து உண்பதோடு, இதனுடைய விதைகளையும் சேமித்துக் கொள்ளலாம்.

தேவைகள் அதிகமாகும்போது மனிதன் தனது வாழ்வின் பல்வேறு கோணங்களிலும் புதியனவற்றைப் படைக்கவும் அருகிக் கொண்டிருப்பதை அதிகமாக்கவும் வேண்டியுள்ளது. உருளைக்கிழங்கு, கடற்பாசி, சூரியகாந்தி விதைகள் ஆகியவை ஒரு காலத்தில் மனிதன் உண்ணும் பொருளாக இல்லை தற்போது இவை அன்றாட உணவிலும் இடம் பெறுகின்றன. இனி கீரைவிதையும் சராசரி உணவுப் பொருளாக மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

# கடல் கடந்த கண்ணன்

— பி. ஆர். ஸ்வாமி

கல்கத்தாவிலிருந்து நியூயார்க் வரை சரக்கு ஏற்றுமதி இறக்குமதிக்காகப் போய் வந்து கொண்டிருந்த கப்பலே ஜல-தூதா. கப்பலின் மேல்தளத்தில் ஒரு சிறுபகுதி பிரயாணிகளுக்-காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. வெளிப்புறத்தில் உள்ள அறி-விப்புப் பலகையில் மேல்தளத்தில் தங்கும் பயணிகள் பட்டியலில் ஸ்ரீசரணாரவிந்த பக்திவேதாந்த சுவாமி என்ற பெயரும் இருந்தது. அவரது வயது 69 என்பதுவும், கப்பல் கம்பெனியின் விருந்தினர் என்னும் செய்தியும் அதில் காணப்பட்டன. கப்பல் காப்டன் அருண்பாண்டேயும் அவருடைய துணைவியாருடன் கப்பலின் பிறிதொரு பகுதியில் தங்கியிருந்தார்.

கப்பல் புறப்பட்ட நேரம் 1965-ஆம் ஆண்டு ஆகஸ்டு பதின்மூன்று வெள்ளிக்கிழமை காலை 9-மணி. பிரபுபாதரின் நாட்குறிப்பில் காணப்படும் மகிழ்ச்சியான செய்தி இதுவே. “கண்ணபிரானது அருளும், சுமதி மொரார்ஜியின் அன்பும் என்னைக் கைவிடவில்லை. வசதியான அறை, நீலக்கடலின் மெல்லிய பூங்காற்று அடித்துக் கொண்டிருக்கிறது” ஆனால் சுவாமி களுக்கு ஏற்பட்ட இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. கப்பல் புறப்-பட்ட பதினான்காம் நாள் குறிப்போ வேறுவிதமாக இருக்கிறது. “கடல் கொந்தளிப்பு, மயக்கம், வாந்தி, கடுமையான மழைவேறு. அலைமோதும் வங்கக் கடலில் கப்பல் ஆடி அசைந்து போய்க்-கொண்டுள்ளது”. மேலும் ஐந்து தினங்கள் கழிந்தன. கப்பல் கொழும்புத் துறைமுகத்தைத் தொட்டது. கப்பல் தலைவர் அருண்பாண்டேயும் சுவாமிகளும் ஒரு காரில் கொழும்பு நகரை சுற்றிப்பார்த்தனர். கடற்பயணம் தொடர்ந்தது. கொச்சித்துறை முகத்தில் கப்பல் நங்கூரம் இட்ட நாள் கண்ணன் பிறந்த ஜன்மாஷ்டமி. சுவாமிகள் தானே செய்த பொங்கலையும் வடை யினையும் கப்பல் ஊழியர்களுக்கு கொடுத்து கண்ணன் பெருமை யினையும் சொற்பொழிவாகச் செய்தார்.

தொடர்ந்து இரண்டு, மூன்றுதினங்கள் கழிந்தன. ஜலதூதா செங்கடல் பகுதிக்குள் நுழைந்தது. அமைதியாக இருந்த கடல் அலைமோதி ஆர்ப்பரித்தது. நீரில் மிதக்கும்

பெட்டியைப்போல கப்பல் ஆடிக்கொண்டே சென்றது. குமட்டலும் வாந்தியும் வந்ததோடன்றி, சுவாமிகள் ஓரிரு நாட்கள் நெஞ்சு வலியினாலும் வேதனையுற்றார். மீண்டும் கடுமையாக வலி வந்தால் மூச்சு அடங்கி விடும் என்ற நிலை. கண்ணனே கதி என்றெண்ணிப் படுக்கையினை விட்டு எழுந்திராமல் தொழுது-கொண்டேயிருந்தார். தன்னை அறியாது வந்த தூக்கம் அவரை அரவணைத்துக் கொண்டது. அப்போது கனவில் கண்ட காட்சி இதோ!

கண்ணன் படகினை வலித்துக் கொண்டு வருகிறான். கரையிலே நின்று கொண்டு வானத்தை வெறித்து நோக்கும் பிரபுபாதரைக் கை அசைத்துக் கூப்பிடுகிறான். அளவு கடந்த மகிழ்ச்சியினால் இருகரம் கூப்பி கிருஷ்ணா என்று அழைக்கும் போது விழித்துக் கொள்கிறார்.

எத்தகைய கனவும் சாமான்யர்களுக்கு விடிந்தவுடன் மறந்து போகும். நீலமேக வண்ணனை இரவும் பகலும் நெஞ்சிலே நிறுத்திய பிரபுபாதருக்கு அந்த நிலை இல்லை. கண்ட கனவு தெம்பும் நம்பிக்கையும் ஊட்டியது. அடியார்படும் அவத்தையைக் கண்டு வலியை நீக்கி அங்கு கண்ணன் புகுந்து விட்டான் என்றே சொல்ல வேண்டும்.

ஜலதூதா இதற்கிடையில் சூயஸ் கால்வாய் வழியாக போர்ட்செய்ட் துறைமுகத்தை அடைந்தது. காப்டன் அருண் பாண்டே உடன் வர சுவாமிகள் ஒரு நாள் அத்துறைமுக நகரத்தைச் சுற்றிப் பார்த்து வந்தார். சிறுகச்சிறுக உடல் நிலை-யும் தேறி வந்தது. தனக்கு வேண்டிய கிச்சடியும் பூரியும் தானே அன்றாடம் செய்து கொண்டார். கப்பல் அட்லாண்டிக் சமுத்தி-ரத்தைக்கடந்து கொண்டிருந்தபோது வழக்கத்திற்கு மாறாக அச்-சமுத்திரம் சலனமற்றுக் கிடந்தது. எல்லாம் கண்ணனின் அருளே என்றுஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் சுவாமிகள். காப்டனும் அவர் மனைவியும் கப்பல் இந்தியாவுக்கு திரும்பும்போது சுவாமிகளும் கூடவே வர வேண்டும் என்றும் அத்தகைய அமைதியான கடற் பயணத்தை அட்லாண்டிக் சமுத்திரத்தில் அவர்களும் கண்டதே-யில்லை என்று கூறினர். ஆனால் மீண்டும் கடற்பயணம் செய்ய வேண்டாத அளவுக்கு சுவாமிகள் உயர்ந்து விமானத்திலேயே

ஐரோப்பிய, அமெரிக்கக் கண்டங்களைச் சுற்றி வரப்போகிறார் என்று யார்தான் எண்ணிப் பார்க்க இயலும்!

கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு முப்பத்தைந்து நாட்கள் கழிந்து விட்டன. செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள் கப்பல் அமெரிக்காவின் பாஸ்டன் துறைமுகத்தைச் சென்றடைந்தது. ஓரிரு நாட்களில் நியூயார்க்குப் புறப்படவேண்டும். எனினும் ஜலதூதா கப்பலுக்கு அதுதான் அமெரிக்காவின் முதல் துறை முகம். பயணிகளுக்கு சுங்கச் சோதனையும், விசாரணையும் அங்கே நடக்கவேண்டியிருந்தது. சுவாமிகளின் விசாவின்படி அமெரிக்கா வில் அவர் இரண்டு மாதங்கள் தங்க அனுமதி இருந்தது. சுங்க அதிகாரிகளின் அனுமதி பெற்று சுவாமிகளும் காப்டனும் ஒரு மேம்பாலத்தைக் கடந்து பாஸ்டன் நகர கடைத்தெருப் பகுதிக்கு நடந்து வந்தனர்.

ஒரு அமெரிக்க நகரினை முதன் முதலாகப் பார்க்கிறார் சுவாமிகள். அமெரிக்காவில் பாஸ்டன் ஒரு பழைமையான துறை முக நகரம். இங்கிலாந்திலிருந்து அந்தப் புதிய உலகத்திற்குக் குடிபெயர்ந்த ஆங்கிலேயர்கள் முதன்முதலாகக் காலடி வைத்த இடங்களுள் பாஸ்டனும் ஒன்று. "இங்கிலாந்திலிருந்து வந்தாலும், நாங்கள் அமெரிக்க மண்ணைச் சார்ந்தவர்களாகி விட்டோம்; இனி ஆங்கில அரசனுக்குவரி செலுத்தமாட்டோம் என்று அமெரிக்காவில் தங்களது கொடியை உயர்த்தி விடுதலைக்காகப் போராடியபோது, பாஸ்டன் நகரத்துறைமுகத்தில் தான் இங்கிலாந்துக் கப்பலில் இருந்த தேயிலை மூட்டைகளைக் கடலில் கொட்டினார்கள். பழைமையான இந்த வாணிக நகரத்தின் கடைத் தெரு நெரி-சலாகவும் பரபரப்போடும் காணப்பட்டது. தொன்மையான கட்டிடங்களும், கிறித்தவ ஆலயங்களும், மண்டிகளும் அலுவலகங்களும் மதுக்கடைகளும, பழைய புத்தகக்கடைகளும், இரவு விடுதிகளும் கேளிக்கை நிலையங்களும், உணவு விடுதிகளுமாக ஒரு நெருக்கடி மிகுந்த நகரம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

பாஸ்டன் நகரத்தை ஒரு சராசரி நகரமாக எடுத்துக் கொண்டால், எல்லா அமெரிக்க நகரங்களும் இப்படித்தான் இருக்குமோ? நிறமும், மொழியும், பழக்க வழக்கங்களும் முற்றி லும் மாறுபட்ட இந்த அந்நிய மண்ணில் நான் என்ன செய்து

விட முடியும்? ஏதோ ஒரு அளவுகடந்த உற்சாகத்தினால் வந்து விட்டேன்; இனி யாது செய்வது? என்னை ஆட்கொண்டருளிய கண்ணன் வழியே நடப்பேன் - என்று இந்த சிந்தனையோடு நகர் உலா முடிந்ததும் கப்பலுக்கு வந்து சேர்ந்தார் சுவாமிகள்.

செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள், நியூயார்க துறைமுகம் வந்து விட்டது. கப்பல் நங்கூரமிட்டு நின்ற இடம் புரூக்லின் பியர். நகரின் பதினேழாம் தெருவினை ஒட்டிய பகுதி அது. கப்பலின் மேல் தளத்திலிருந்து பார்க்கும்போதே மன்காட்டன் தீவில் விண்ணைமுட்டி நிற்கும் அழகான உயர்ந்த கட்டிடங்களும், தெருக்களில் சாரி சாரியாக விரைந்து செல்லும் கார்களும் தென்பட்டன. இன்னொரு புறத்தில் உலகிலேயே மிக உயரமானதும் நூற்றுப்பத்து மாடிகள் கொண்டதுமான எம்பயர் ஸ்டேட் பில்டிங்கும், நூற்றாண்டு விழா கொண்டாடிய சுதந்திரச் சிலையும் நன்றாகத் தெரிந்தன. முற்றிலும் புதிய சூழ்நிலையில் தன்னை ஒரு கணம் மறந்துவிட்ட சுவாமிகள் தன்னுடைய உடைகளை எடுத்துக் கொண்டு மேல் தளத்தை விட்டு இறங்கி நடந்தார்.

சுவாமிகளோ பரம வைணவர். கழுத்தில் துளசி மாலை. கையிலும் ஜபமாலை. இடுப்பில் அணிந்துள்ள சாதாரண நூல் வேட்டி. ஜிப்பா போன்ற மேலங்கியைப் போர்த்தது மாதிரி மெல்லிய கம்பளித்துண்டு. பொன்னிறமான மேனி உச்சிக்குடுமி தவிர மழுங்க மொட்டை அடிக்கப்பட்ட தலை. நெற்றியில் திருநாமம். காலில் ரப்பர் ஸ்லிப்பர்கள். தன்னுடைய உடையிலோ, தோற்றத்திலோ அமெரிக்க நாகரிகத்துக்கு ஏற்புடைத்தான எந்த மாற்றமும் இன்றி நியூயார்க்கில் அடியெடுத்து வைக்கும் இவரை யாரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அந்த நகர மக்களின் இயல்பே அது தான்.

சுவாமிகள் எங்கு போவது? இடது புறமா? வலது புறமா? பையில் இருப்பதோ நாற்பதுரூபாய். கப்பல் கேப்டனிடம் பாகவதம் விற்ற வகையில் இருபது டாலர். இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? நல்ல வேளை! அகர்வால் அனுப்பிய பிரதிநிதி ஒருவர் சுவாமிகளைநேரில்வந்துகண்டார் சுவாமிகளை அடையாளம்கண்டு கொள்வது ஒரு பிரச்சனை இல்லையே! அகர்வால் இருப்பிடத்தை சேர பஸ் பயணம் — ஒரிரு மணி நேரம். பென்சில்வேனியாவுக்கு

அருகில் பட்லர் என்னுமிடத்தில் அவர்கள் இல்லம். அகர்வாலின் மனைவி ஒரு அமெரிக்கர். அவர்கள் சுவாமிகளை அந்நகரத்தின் கிறித்தவ சங்கக் கட்டிடத்தில் தங்கியிருக்க ஏற்பாடு செய்தனர். இயன்ற நேரங்களில் எல்லாம் அவர்கள் இல்லத்துக்கு வந்து போகலாம் என்றும் கூறிவிட்டனர்.

மத்திய தரப்பிரிவு மக்கள் வசிக்கும் பகுதி அது. அகர்வாலின் இல்லத்துக்கு வரும் விருந்தினரும், நண்பர்களும் சுவாமிகளை வந்து கண்டு உரையாடினார் வேதாந்த விசாரத்தில் ஈடுபடவோ, இந்திய மதங்களைக் குறித்தோ வைணவப் பிரிவு பற்றியோ ஏதும் தெரிந்து கொள்ள வரவில்லை அவர்கள். சுவாமிகளை ஒரு விசித்திரப் பொருளாகவே வந்து கண்டனர். இருப்பினும் அகர்வால் தம்பதியினருக்கு சுவாமிகளால் எந்த தொல்லையும் இல்லை. அகர்வாலின் அமெரிக்க மனைவியே அதுபற்றிக் கூறுகிறார்:

"வீட்டுக்கு வரும் நேரங்களில் என்னுடன் பேசுவார். நான் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் போது இலேசான குரலில் தெய்வீகப் பாடல்களைத் தானாகப்பாடிக் கொண்டிருப்பார். கோபாலின் தந்தையாருக்கு முன்னிலையில் நான் சிகரெட் புகைக்கக்கூடாது என்று தெரியும். அதுபோன்றே சுவாமிகளின் முன்னிலையிலும் நான் புகைத்ததில்லை. பிறர் யாரேனும் சுருட்டோ, சிகரெட்டோ புகைத்தால், சுவாமிகள் அதனைகண்டு கொள்வதில்லை. அவர்கள் பழக்கம் என்று கூறி விடுவார். அவ்வளவு நல்ல இயல்பு! சுவாமிகளின் நினைவாற்றல் வியக்கத் தக்கதாகும். ஒருமுறை அறிமுகப்படுத்தினாலும், அவர் பெயரை சுவாமிகள் மறப்பதில்லை. அவரைப் பற்றிய செய்தியையும், பக்தியோகத்தின் தூதுவர் என்ற தலைப்பில் அவரது புகைப் படத்தையும் வெளியிட்ட பெருமை எங்கள் நகரில் வெளியாகும் பட்லர் ஈகிள் என்னும் பத்திரிக்கையைச் சாரும்."

சுவாமி பக்தி வேதாந்தாவின் ஆன்மீகக் கருத்துகளைக் குறித்தும், அவரது அன்றாட அலுவல்கள் பற்றியும் அப்பத்திரிகை கீழ்வரும் செய்திகளை அரைப்பக்க அளவில் வெளியிட்டிருந்தது.

மக்கட் சமுதாயம் இன்னும் பரிபூரண நிலையை அடையவில்லை. எல்லா உயிரினங்களுக்கும் கடவுள் ஒருவரே தலைமகன்

ஆவர். எனவே கடவுள் நம்பிக்கையினை ஆயுட்காலம் முழுதும் அனைத்து மக்களிடையேயும் பரப்புவதே எனது குறிக்கோள்'' என்று கூறும் இவர் துறவியினைப் போன்று வாழ்ந்து வருகிறார். எந்தப் பெண்டிரும் அவரது உணவைத் தொட அவர் அனுமதிப்பதில்லை. சிறிது அரிசி பருப்பு காய்கறிகளைப் போட்டு அகர்வால் இல்லத்தில் அவராகவே சமைத்துக் கொள்ளுகிறார். புலால் உணவைத் தொடாத இந்தச் சுவாமிகள் ''முதியவரும் குழந்தைகளுக்கும் உரிய திரவ உணவாகிய பால்' எனக்குப் போதுமானது என்கிறார். ஆன்மீக வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் அமெரிக்கர்கள் மேலும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதும் அவரது கருத்து.''

அகர்வாலின் நான்கு வயதுப் பெண் குழந்தை பமீலா. பக்தி வேதாந்தரை அவள், 'கிறிஸ்து சுவாமி' என்று கூப்பிடுவது உண்டு. சுவாமிகள் மகிழ்ந்து போவார். அகர்வாலின் மனைவியோ சுவாமிகளைத் தனது மாமனாரைப் போன்றே பணிவுடனும் மிகுந்த மரியாதையுடனும் நடத்தி வந்தார். அகர்வால் வீட்டுக்கு வரும் நண்பர்களிடையே சாவதானமாக உரையாடியது மட்டுமன்றி, சுவாமிகள் ஓரிரு முறை பெனிசில்வேனியா நகரத்தில் லயன்ஸ் கிளப்பிலும், கிறித்தவ ஆயர்கள் கல்லூரியிலும் சொற்பொழிவாற்றினார். அமெரிக்க நாட்டில் தங்கியிருந்து தொடர்ந்து ஆன்மீகப் பொழிவுகள் நடத்தி விடலாம் என்னும் நம்பிக்கை சுடர் விட்டது. அவரது ஆங்கிலப்பேச்சை அமெரிக்கர்கள் புரிந்து கொள்ளமுடியும் என்றும் தெரிந்து விட்டது. இதற்கிடையில் அந்நாட்டில் தங்குவதற்குச் சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்ட இரண்டு மாதங்களில் ஒரு மாதமே மீதம் இருந்தது. ஒரு நாள் பிட்ஸ்பர்க் பஸ்நிலையம் வரை சென்று சுவாமிகளை வழி அனுப்பி விட்டு வந்தார் கோபால்.

பட்லர் நகரத்தை விட்டுச் சுவாமிகள் பிலடெல்பியாவுக்கு வந்து அங்கு வடமொழிப் பேராசிரியர் டாக்டர் நார்மன் பிரௌன் என்பாரது விருந்தினராகத் தங்கினார். தனிப்பட்ட முறையில் பற்பலர் சுவாமிகளது சொற்பொழிவுக்கு வந்தனர். சில நாட்கள் அங்கு தங்கி விட்டு நியூயார்க் பயணத்திற்கும் ஏற்பாடாயிற்று. முன்னமேயே தொடர்பு கொண்டிருந்த டாக்டர் மிஸ்ராவின் மாணவர் ஒருவர் சுவாமிகளை நியூயார்க்பஸ்நிலையத்திலிருந்து

அவரது இருப்பிடத்துக்குக் கூட்டிச் சென்றார். ஹட்சன் நதிக் கரையில் வானளாவிய கட்டிடத்தின் பதினான்காவது மாடியில் மிஸ்ரா தங்கியிருந்தார். அவரும் ஒரு சந்நியாசியே சற்றே கரிய நிறத்தவர். காவியுடை தரிக்காமல், வெண்ணிற மேலங்கியும், பேன்ட்டும் அணிந்து கொள்பவர். கையையும், தலையையும் ஆட்டி நாடக பாணியில் பேசும் பழக்கம் உடையவர். முதன் முதலாக சுவாமிகள் அவரை சந்தித்தபோது அவருடன் நாட்டியப் புகழ் உதய்சங்கர், அவருடைய சகோதரர் ரவிசங்கர் ஆகியோரும் இருந்தார்கள்.

பக்தி வேதாந்தரின் கடமை நோக்கும், எளிமையும் தூய்மையும் மிஸ்ராவுக்குப் பிடித்திருந்தன. சுவாமிகளைப் பற்றி மிஸ்ராவே கூறுகிறார். “பிரபுபாதர் ஆழ்ந்த அன்பினால் என்னைக் கட்டுப்படுத்தி விட்டார். குறித்த நேரத்தில் எளிய உணவு உண்ணும் அவரது பழக்கம் என்னைக் கவர்ந்த ஒன்று. உடல் நலம் குன்றி எலும்புக் கூடாக இருந்த என்னை அவரது பகவத் பிரசாதமே காப்பாற்றியது. பசி இருக்கிறதோ இல்லையோ உரிய நேரங்களில் சிறிதளவேயாயினும் உண்ண வேண்டும் என்ற நியதியை அவர்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தவர்.”

யோகப் பயிற்சியில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வந்த டாக்டர் மிஸ்ரா இந்தியாவுக்கு வரத் திட்டமிட்டிருந்தார். எனவே பிரபுபாதரை எழுபத்தி இரண்டாம் தெருவில் உள்ள தன்னுடைய ஹடயோக நிலையத்தில் தங்கியிருக்க ஏற்பாடு செய்தார்.

(தொடரும்)

## தமிழ்ப் பல்கலைக்கழகம்
## தஞ்சாவூர்
### புதிய வெளியீடுகள்

இருபெரும் களஞ்சியங்கள் :

1. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி - 1 (அ - அளபெடை)
   திம்மி 1/4 பக்கங்கள் 1000 விலை ரூ. 300.00
2. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி-1 (அ-ஔ)
   திம்மி 1/4 பக்கங்கள் 578 ,, 250.00

ஆய்வு, மறுபதிப்பு நூல்கள் :

3. ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் (மறுபதிப்பு)
   முனைவர் உ. வே. சாமிநாதையர் ,, 120.00
4. மனிதனும் மரபியலும்
   டாக்டர் கூ. இராசராசேசுவரி ,, 7.50
5. செழியதரையன் பிரபந்தங்கள்
   பதிப்பாசிரியர் : மு. சண்முகம் பிள்ளை
   குறிப்புரை : ப.வெ. நாகராசன் ,, 107.00
6. குடற்புண்ணைக் குணப்படுத்தலாம்
   டாக்டர் சு. நரேந்திரன் ,, 5.00
7. தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்
   வெ. வரதராசன் ,, 55.00
8. Dravidian Influence in Thai Culture
   M.E. Manickavasagom ,, 70.00
9. அறுவைச்சிகிச்சை நோய் நாடல்
   டாக்டர் வெ. சிவராமன் ,, 120.00
10. English - Tamil Pedagogical Dictionary
    Dr. S. Rajaram ,, 80.00
11. பத்துப்பாட்டு (மறுபதிப்பு)
    தொகுப்பாசிரியர் முனைவர் உ.வே. சாமிநாதையர்
12. தமிழர் வாழும் அண்டைநாடுகளில் தமிழ்க்கல்வி
    முனைவர் தி. முருகரத்தனம் ,, 57.00

கழிவு : களஞ்சியங்கள், மாணவர் பதிப்புகள் 25%
பிற நூல்கள் .......... 30%
,, பேராசிரியர், ஆய்வுமாணவர்க்கு 40%
அஞ்சற்செலவு தனி

தொடர்புகொள்ள முகவரி :

துணை இயக்குநர், பதிப்புத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் 613 001, தமிழ்நாடு

துணை இயக்குநர், பதிப்புத்துறை